
# தூண்டில்




TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகமும் இன்னும்.

- காங்கேயன் கோவிந்தமார் -

இங்கு
சீதனச்சிறைகளில் மட்டும்
எத்தனை
பெண்மணிகள்..
தாலிக்கொரு
சுதந்திர நாளுக்காய்
எத்தனை
தவமிருப்புக்கள் ...
இங்கு
குழந்தைப்பாக்கியங்களும்
சோற்றுப்பஞ்சங்கள் ..
ஓ இளைஞனே
தேசம்
உற்சாகங்களையல்லவா
உன்னிடம்
கடன் கேட்கிறது ...
நீயோ
சோம்பலிலே
சவாரித்துக்கிடக்கிறாயே ...
சமூகம்
எங்களுக்கு
அஞ்சல் செய்த
பிரித்தல் கடிதங்கள் அவை !



பதில் எழுத வேண்டியது
உன் கரங்கள் அல்லவா !
நீயோ
சோம்பலுக்குள்
சுகம் காணலாமா ?
உன்
செயலுக்குப் பிறகுதானே
இந்த சூனியங்கள்
நின்று போகும் ...
வா எழுந்து
உன் கடிதங்கள்
எல்லா முகவரிகளுக்கும்
எல்லா தேசங்களுக்கும் !

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# பெண் விடுதலை

மார்ச் எட்டாம் திகதி சர்வதேச மகளிர் தினமாகும். ஆதிக்கமும், பெண்ணடிமை நிலையும் தொடர்ந்து நீடிக்கிறது என்பதை இத்தினம் குறிக்கிறது. ஊண்டில் கலம் பதினெந்தை பெண் ஆக்கதாரர்களின் ஆக்கங்களைக் கொண்டே வெளியிட வேண்டும் என்பதற்காக இறுதித் திகதி வரை காத்திருந்தோம். ஆனால் வாசகர் கடிதம் கூட ஒரு பெண்ணிடமிருந்து வரவில்லை. இந்தக் கலம் பிரதி பண்ணப்படும்வரை கூட சென்ற கலத்தில் சர்வதேச மகளிர் தினம் பற்றி எந்த ஆக்கங்களும் இல்லாதது ஏன் என ஒரு கடிதம் கூட வரவில்லை.

பெண்கள் எப்படியான நிலையில் இருக்கிறார்கள் என்பதற்கு இதுவே சிறிய உதாரணமாகும். ஆதிக்கமும், அரசியற் பொருளாதாரக் காரணிகளும் பெண்களை ஒருபுறம் அடிமைப்படுத்தினாலும், இன்னொருபுறமாகப் பெண்களே தங்களைச் சுற்றி விலங்குகளைப் பூட்டியுள்ளார்கள். இந்த மனோபாவம் ஆதிக்கத்தை வலுப்படுத்துவதுடன் பெண்ணடிமைத்தனத்தையும் ஊக்குவிக்கிறது. ஒடுக்கப்படும் மக்கள் தாங்கள் ஒடுக்கப்படுகிறோம் என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டால்தான் ஒடுக்குமுறைக்கு எதிராகச் சரியான முறையில் போராடி தம்மை விடுவித்துக்கொள்ள முடியும். அதே போல் தாம் அடிமைப்படுத்தப்பட்டுள்ளோம் என்பதைப் பெண்கள் முதலில் புரிந்து கொண்டால்தான் தமது விடுதலைக்காகப் போராட முடியும். எனவே எப்படியாக அடிமைப்படுத்தப்படுகிறோம் என்பதை முதலில் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

பெண்ணானவள் குழந்தைப் பருவத்திலிருந்தே அடிமை நிலைக்கும் அலங்கார நிலைக்குமாகப் பெற்றோரால் தயார்படுத்தப்படுகிறாள். மேலதிக ஆபரணங்கள், அலங்காரப் பூச்சுகளால் குழந்தை நிலையிலேயே பெண் ஆணிலிருந்து வேறுபடுத்தப்படுகிறாள். அதன் பின்பு பாடசாலைக்குப் போவதிலிருந்து மற்றவர்களுடன் சேர்ந்து விளையாடுவதுவரை பெண்ணுக்கெனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரத்தியேகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. பாதுகாப்பு என்ற பெயரில் பெண்களுக்கான சுதந்திரம் மறுக்கப்படுகிறது.

திருமணம்தான் வாழ்க்கை என்று சிறுபிராயத்திலிருந்தே பெண் பிள்ளைகளுக்குப் புகட்டப்படுகிறது. இந்தத் திருமணக் கட்டத்திற்காக பெண்கள் பல வழிகளிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். நன்றாகச் சமையல் செய்வதிலிருந்து, அழகாகத் தலை பின்னிக் கொள்வது, அழகாக உடையணிவது, கவர்ச்சியான ஆபரணங்களை உபயோகிப்பது, சலவை செய்வது, துப்பரவாக்குவது, சங்கீதம் படிப்பது, தலையைக் குனிந்தபடி நடப்பது, வீட்டுக்கு வெளியே அடிக்கடி போகாமல் அடக்கமாக இருப்பது போன்ற எல்லா வழிகளிலும் தரமான பயிற்சியளிக்கப்படுகிறது. வரப்போகும் கணவனுக்கு எப்படியதன தொண்டுகள் செய்ய வேண்டுமென நிலப்பிரபுத்துவ காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், இதிகாசங்களைக் காட்டி புகட்டப்படுகிறது. ஆக மொத்தத்தில் திருமணத்தின் பின் கணவனுக்கு எப்படி அடிமையாக இருக்க வேண்டுமென்று பெண்கள் சரியான முறையில் தயார் செய்யப்படுகிறார்கள்.

இந்தத் தயார்படுத்தலிலேயே தங்களுடைய பாதி வாழ்நாளிலான சுதந்திரங்களைப் பெண்கள் இழந்துவிடுகிறார்கள். இந்தச் சுதந்திரப் பறிப்பில் பெற்றோர் ஸ்தானத்திலுள்ள பெண்களே பிரதானமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களால் நல்ல அடிமைகளாக்கப்பட்ட பெண்களும் தாங்கள் தாயாகும்போது தங்களது பெண்பிள்ளைகளையும் தங்களைப்போலவே ஆக்கிவிடுகிறார்கள். இதுவே இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

திருமணத்தின் பின் படிப்பைத் தொடர்வதற்கோ, வேலைக்குப் போவதிற்கோ, வெளியில் வேறு அலுவல்களைக் கவனிப்பதற்கோ பெரும்பாலான பெண்களுக்குச் சுதந்திரமில்லை. இங்கு கணவனின் ஆணுதிக்கம் மட்டுமன்றி அரசாங்கமும் இந்த அடக்குமுறைக்கு மறைமுகமான காரணியாக உள்ளது. ஒரு இயந்திரம் நன்றாக வேலை செய்ய வேண்டுமென்றால் அது நன்றாகப் பராமரிக்கப்பட வேண்டும். அதைப் போலவே தங்களுக்கு வருமானத்தைத் தேடித் தருவதற்காக உழைக்கும் ஆண்களைப் பராமரிப்பதற்காக பெண்களை அடக்கி, ஒடுக்கி வைத்துள்ளன முதலாளித்துவ அரசுகள். இதற்கான வழிமுறைகளாக பெண்களுக்குத் தொழில் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. பொருளாதாரத்தில் பெண்கள் இன்னொருவரில் தங்கியிருக்கும் நிலை உருவாக்கப்படுகிறது. பாலியல் பலாத்காரங்கள் தூண்டப்பட்டு பெண்களுக்கான பாதுகாப்பு மறுக்கப்படுகிறது. இதனால் பெண்கள் யாரோ ஒருவரிடம் பாதுகாப்புக் கோர வேண்டியவர்களாயுள்ளார்கள். பொருளாதார, பாதுகாப்பு அடிப்படைகள் இல்லாமல் செய்யப்பட்டு பெண்கள் தனியே வாழக்கூடிய நிலைமை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. எனவே உழைக்கும் கணவ



னைப் பராமரித்து, அவனுக்கு இன்பமளித்து, ஏனைய தேவைகளையும் கவனிக்கும் பாரம் பெண்கள் மேல் கணவன்மார்கள் ஊடாக அரசாங்கத்தினால் சுமத்தப்படுகிறது.

முதலாளித்துவப் புரட்சியடைந்த மேற்கு நாடுகளில் அதிக உற்பத்தித் தேவை காரணமாக பெண்களுக்கும் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. ஆனால் அதே நேரம் தமது பிரதான உழைப்பாளிகளான ஆண்களுக்கு இன்பமளித்துத் திருப்திப்படுத்துவதற்காக விபச்சார விடுதிகளையும், கேளிக்கை அரங்குகளையும் இந்த அரசுகள் திறந்து வைத்துள்ளன. கட்டுப்பாடற்ற பாலியல் தொடர்புகள், மது, சூது போன்றவற்றின் மூலம் உழைப்பாளிகளின் உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டு தமது அடிமை நிலையை உணரா வண்ணம் அவர்கள் மயக்க நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள். எனவே மேற்கத்தேய பெண்கள் அனைவரும் சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள் என்று கூற முடியாது.

ஆகவே முதலாளித்துவப் புரட்சி உண்மையான விடுதலையாகாது. மாறாக இது ஒரு மாயநிலையே. உண்மையான விடுதலையை, சுதந்திரத்தையடைய அவற்றை மறுப்பவர்களையும், அவர்கள் உருவாக்கியுள்ள சமுதாய அமைப்பு முறைகளையும் இனம்கண்டு அவற்றைத் தகர்த்தெறிய வேண்டும். இதற்காகப் பெண்கள் முன்வர வேண்டும். இவர்களுடைய போராட்டத்தில் தங்களுடைய பங்கு என்ன என்பதை பல ஆண்கள் அறியாதவர்களாகவே உள்ளனர்.

முதலாளித்துவ, ஏகாதிபத்திய அரசுகள் தங்கள் நலன்களுக்காக பெண்களை அடிமைப்படுத்த ஆண்களை உடந்தையாக்குவதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும். உழைப்பு ரீதியில் தாம் ஒடுக்கப்படும் அதே நேரம் தன்னால் பெண் ஒடுக்கப்படுகிறாள் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். ஒடுக்கப்படுபவர்கள் அனைவரும் இணைந்து கொண்டால்தான் ஒடுக்குமுறைக்கெதிராகப் பலமாகப் போராடி வெற்றி பெறலாம் என்பதினால் பெண்ணடிமைத்தனத்தை அழிக்க ஆண்களும் முன்வர வேண்டும்.

ஆரம்பகாலப் பொதுவுடமைச் சமுதாயத்தில் தாய்வழிச் சமூக அமைப்பு முறையாக இருந்ததுதான் தனியுடமைச் சமுதாய மாற்றத்தின் பின் தந்தைவழிச் சமூகமாக மாற்றப்பட்டது. இக் காலகட்டத்தில்தான் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் ஆரம்பமாகின. எனவே பெண்ணடிமைத்தனம் மனிதகுலம் தோன்றிய நாளிலிருந்து உண்டான ஒன்றல்ல. இடையில் தமது நலன்களைப் பாதுகாக்க விரும்பியவர்களாலேயே உருவாக்கப்பட்டது. தனியுடமையைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட பெண்ணடிமைத்தனத்தை அழிக்க வேண்டுமாயின் தனியுடமை அமைப்புமுறையைத் தகர்த்தெறிந்து பொதுவுடமைச் சமுதாய மாற்றத்திற்காகப் போராட வேண்டுமென்பது தெளிவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவம் செய்யும் லயன்கள்

... அம்பலவன் புவனேந்திரன்

எங்கள் — சுவாசக் காற்றின் உஸ்ணத்தால்
சூரியன் வருமுன்னே பனி விலகும்.
எங்கள் — ஊதியம் பாதியாய் உறிஞ்சப்படுவதுபோல்
உதிரமும் அட்டைகளுக்கு உணவாகும்.
எங்கள் — தேகத்தின் உதிரம் தேயிலையில் சேர்ந்ததால்
தேநீரின் நிறம் சிவப்பாகிப் போனது.
எங்கள் — வேகும் உடலின் வியர்வையினால்தான்
தேயிலைச் செடிகள் செழிப்பானது.
நாங்கள் — உயர்ந்த மலைகளில் இருந்து நாட்டை
உயரவைக்க தினமுழைத்தோம்.
எங்கள் — வாழ்வை உயர்த்த விண்ணப்பித்து நாடு
வாழ்ந்திட அங்கீகரித்தோம்.
நாங்கள் — அந்நியர் என்ற பெயரைச் சூட்டி
அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொடுத்தோம்.
எங்கள் — முதுகெலும்பை முறித்தே நாட்டின்
முதுகெலும்பை நிமிர்த்தினோம்.
நாங்கள் — முடியாட்சியில் குடியேற்றப்பட்டோம்
குடியாட்சிவரை குட்டு வாங்கினோம்.
எங்கள் — குடியுயரும் நாளும் வராதா?
முடிவொன்றை விரைவில் தராதா?



# பெண்ணடிமை

- வி. நடராஜன் -

மனித சமுதாய வரலாற்றில் முதன் முதல் தோற்றம் கண்ட சமூக, பொருளாதார அமைப்பு புராதன கூட்டு வாழ் சமூக அமைப்பாகும். அக் காலத்தில் உழைப்பிற்கான பொருட்கள், கருவிகள் இருக்கவில்லை. மக்கள் இயற்கைக்கு கட்டுப்பட்டு வாழ்ந்ததுடன் இயற்கையில் உள்ளவற்றையே தங்களது தேவைகளுக்கும் பயன்படுத்தினார்கள். உதாரணமாகப் பழங்கள், தாவரங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவர்களுடைய வாழ்விடங்களாக காடுகளும், மலைகளும் இருந்துள்ளன. அதனால் இவர்கள் பொதுவாக உழைத்து மேற்குறிப்பிட்ட இடங்களிலேயே வாழ்ந்து வந்தனர். அக் காலத்தில் கணவன், மனைவி, குடும்பம் என்ற பந்தங்கள் கிடையாது. அச் சமூகத்தில் பிறக்கும் பிள்ளைக்குத் தாயின் பெயரையே முழுப் பெயராக வைத்தனர். ஏனெனில் கணவன், மனைவி என்ற பந்தமில்லாமல் ஒரு பெண் எல்லோருடனும் உறவாடும் அளவிற்கு ஆரம்பத்தில் இம் மக்களின் வாழ்க்கை ஓரளவு காட்டுமிராண்டித்தனமாக இருந்தது. இதனால் பெண்ணே அச் சமூகத்துக்குத் தலைமை தாங்கினாள். இதனையே தாய் வழிச் சமூகம் என்பர்.

பின்னர் படிப்படியான (உழைப்புப் பொருட்கள், கருவிகள் ஆகியவற்றின் வளர்ச்சியும், மக்களின் திறமையும், அனுபவமும்) உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியானது கூட்டுழைப்பை அப்புறப்படுத்தி, தனி மனித உழைப்பைச் சாத்தியமாக்கி தனிச் சொத்துடமையை (அரசை) தோற்றுவித்ததுடன் மக்களிடையே பொதுவான கூட்டுழைப்பில் இருந்த 'தானாக முன்வந்து ஒத்துழைத்தல், ஒருவருக்கொருவர் உதவுதல்' என்ற உற்பத்தி உறவு முறையை மாற்றி சுரண்டல், போட்டி எனும் உற்பத்தி உறவு முறையைத் தோற்றுவித்தது. இவ்வாறு உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியானது தேவைக்கு அதிகமான உற்பத்தியைப் பெருகச் செய்து இயல்பான பால், வயது போன்ற உழைப்புப் பிரிவினையானது மிகை உற்பத்தியில் ஆண்களை முனைந்து ஈடுபட வைத்ததுடன், இவ்வாறு உற்பத்தி செய்து சேமிக்கப்படும் பொருட்களை யார் பராமரிப்பது, தங்களுக்குப் பின் இதை யார் அனுபவிப்பது என்றும் சிந்திக்க வைத்தது. இதன் விளைவாகத்தான் சேகரிக்கும் பொருட்களை பராமரிக்க தங்களுக்கு ஒரு மனைவி வேண்டும் என்பதையும், தங்களுக்குப் பின் தங்களது சொத்துகளை அனுபவிக்க வாரிசு வேண்டும் என்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தனர். எனவே தங்களுக்கென்று மனைவிகளை உருவாக்கி அவர்கள் மூலம் வாரிசுகளைப் பெற்றுக் கொண்டனர். அன்றிலிருந்து இன்றுவரை இக் குடும்ப அமைப்பு முறை 'தந்தை வழிக் குடும்பம்' எனப் பெயர் பெற்றதுடன் பெண்கள் கணவர்களின் சொத்துப் பராமரிப்பாளர்களாகவும், பிள்ளைபெறுபவர்களாகவும் தங்கள் கணவர்களின் உழைப்பில் தங்கியிருப்பதனால் அவர்களுக்கு கட்டுப்பட வேண்டியவர்களாகவும் ஆக்கப்பட்டனர். இக் கட்டுப்பாடுகளின் கீழ் சுரண்டும் அரசுகளின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் படிப்படியாகத் திணிக்கப்பட்டதுதான் இன்றுவரை நிலவும் பெண்ணடிமைத்தனங்களாகும்.

இவற்றிலிருந்து ஒன்றை மட்டும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அதாவது பெண்ணடிமை என்பது மனித சமுதாயம் தோன்றியதிலிருந்து உருவாகவில்லை. மாறாக கூட்டுழைப்பில் இருந்து தனி மனித உழைப்பு சாத்தியமாகி பெண்கள் உற்பத்தியில் பங்கெடுத்தல் என்று தடுக்கப்பட்டதோ அன்றிலிருந்து உருவானதுதான் பெண்ணடிமைத்தனமாகும்.

இவ்வடிமைத் தனங்களால் பெண்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். ஆனால் இவ்வடிமைத் தனங்களிலிருந்து விடுபட என்ன செய்ய வேண்டும்? இது எவ்வாறு தோற்றம் கண்டது? இதை எவ்வாறு தகர்த்தெறிவது என்பது பற்றி எவ்வளவு பேர் சிந்திக்கிறார்கள்? சில பெண்கள் தங்களைச் சுற்றி அடிமை விலங்கு பூட்டப்பட்டிருப்பதை மறந்து உல்லாசக் கனவுலகில் வாழ்கின்றனர். இது தவிர சில ஆண்களும் குசினிக்குள் வந்து சமைத்தால், ஆண்களைப் போல தாங்களும் ஆடையணிந்தால் தாம் ஆணுக்கு நிகர் எனவும் கருதுகிறார்கள். (சுதந்திரம் கிடைத்தாக கருதுகிறார்கள்).

பொருளாதார அடித்தளத்தின் மேல் எமது நாட்டில் ஏற்பட்ட தேசிய விடுதலைப் போராட்டத்தின் விளைவாக ஐரோப்பிய நாடுகளுக்கு அடியெடுத்து வைத்த பெண்களின் மனப்பாங்கு மேற்குறிப்பிட்டவாறு இருப்பதுடன் இவர்கள் மேற்குலகப் பெண்கள் போலவும் உடுப்பணிந்து இன்னும் சில இடங்களில் ஒரு படி முன்னேறி பியர் போத்தல்களுடனும், சிகரட்டுகளுடனும் கூடக் கூடிக் குலாவுகின்றனர். இந்தளவிற்கு எமது பெண்கள் ஓரளவு உயர்ந்து விட்டார்கள் என்று பெருமைப்பட்டாலும் (இதன் அர்த்தம் கலாச்சாரச்சீரழிவிற்கு முண்டு கொடுப்பதல்ல) நிரந்தரமான அடிமைத்தனங்களிலிருந்து விடுபட ஓர் அடிப்படை மாற்றத்திற்கான போராட்டத்தை மறந்து குறுக்கு வழியில் நிரந்தரமற்ற, போலியான சுதந்திரத்தை தேடி அலைகிறார்கள் என்பது வேதனைக்குரிய விடயமே. மேற்குலகப் பெண்களும், எமது பெண்களும் சமூக, பொருளாதார அமைப்பில் வாழ்ந்தவர்களே. உற்பத்திச் சக்தியின் வளர்ச்சியும் அதனால் உற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட மாற்றமும் முதலாளித்துவத்திற்கு முந்திய சகாப்தமான நிலப்பிரபுத்து



வத்தை அப்புறப்படுத்தி தற்காலிக முதலாளித்துவத்தைத் தோற்றுவித்தது. இதில் பெண்கள் உற்பத்தியில் பங்கெடுப்பதனால் தங்களுக்குரிய முடிவுகளை தாங்களே தீர்மானிக்கும், தங்களுடைய தேவைகளை தாங்களே பூர்த்தி செய்யும் நிலைமைகளை ஓரளவுக்கு கொண்டிருந்தாலும் இப் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சுதந்திரத்தை முதலாளித்துவமானது மூலதன முதலைகளின் கவர்ச்சி விளம்பரங்களுக்காகவும், தன்னைத் தக்க வைத்துக் கொள்வதற்காக போதைப் பொருளாக்கி பரந்துபட்ட தொழிலாளர் வர்க்கத்தை படுகுழியில் தள்ளுவதற்குமாகவே பயன்படுத்துகிறது.

இது இவ்வாறிருக்க, எமது நாட்டில் பெண்கள் குறிப்பிட்ட பருவத்தை அடைந்தவுடன் அவர்களை கல்வியிலிருந்து பெற்றோர் அந்நியப்படுத்தி வீட்டுக்குள் அடைக்கின்றனர். இது பெண்கள் தங்களுக்குரிய பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திப்பதற்கும், வரலாற்று ரீதியாக இப் பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை கண்டறிவதற்கும் தடையாக இருக்கிறது. இதற்கு பெண்களுடன் கூடவே பிறக்காத அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் 'நால்வகைக் குணங்களை' பெண்களுடன் கூடவே பிறந்ததாக சொல்லி கட்டுப்படுத்தப்படுகிறார்கள். பெண்கள் வீட்டுக்குள் இருக்க வேண்டும், வெளியே போகக் கூடாது, ஆடவர்களுடன் பழகக் கூடாது என்று கட்டுப்பாடுகளை விதித்து இவற்றை மீறுபவர்கள் பெண்களல்ல என்றெல்லாம் போதித்து தமது போதனைகளுக்கு துணையாக நிலப்பிரபுத்துவ இலக்கியங்களானதொல்காப்பியம், திருக்குறள், இராமாயணம், பாரதம் போன்ற சீரழிவு இலக்கியங்களை துணைக்கழைக்கிறார்கள். இந் நிலையில் இந்த 'நால்வகைக் குணங்களுடன்' வீட்டுக்குள்ளேயே வாழ்ந்த எமது பெண்கள் இந்திய இலங்கை முதலாளித்துவங்களின் கூலிப் பட்டாளங்களினால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு நடுத் தெருவில் வீசியெறியப்பட்டனர். வீசியெறியப்படுகின்றனர். இப் பெண்கள் எவ்வாறு இந்த நிலைக்கு ஆளானார்கள் என்பது பற்றிச் சிந்திக்காமல் அப் பெண்கள் மேல் காறி உமிழ்கிறது இச் சீரழிவு இலக்கியங்களை தலைமேல் வைத்துக் கூத்தாடும் இழிந்த சமூகம்.

இவ்வாறான அடக்கு முறைகளிலிருந்து திருமணம் எனும் பருவத்தை அடைந்ததும் தனிச் சொத்துடமையின் போட்டா போட்டியினால் ஏற்படும் சீதனப் பேரலைகளினால் அள்ளியெறியப்பட்டு மீண்டும் எத்தனையோ பெண்கள் வீட்டுக்குள் அழுது கொண்டிருக்கிறார்கள். உழைக்கும் மக்களின் உழைப்பில் முதலாளி வர்க்கமெல்லாம் இலட்சக்கணக்கில் சீதனம் கொடுத்து தமதுபெண்களுக்கு மாப்பிள்ளை எடுக்கும்போது தமது உழைப்புச் சக்தியை விலைகூறுவதால் மட்டுமே தமது பிழைப்பிற்கானதைப் பெறுபவர்களுடைய பெண்களின் வாழ்க்கை பெரும்பாலும் தனிமையாகவும், தற்கொலையாகவுமே இருக்கின்றது. இந் நிலையில் இப் பிரச்சினைக்கான நிரந்தர மாற்றத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறிந்து அதற்காகப் போராடாமல் சில ஆண்கள் தம்மைச்சீதனக் காம்ப்பினின்றும் விடுபட்டவர்களாகக் கூறிக் கொண்டு சீதனம் வாங்காமல் திருமணம் செய்து தமக்கு 'புரட்சிகர' முத்திரை குத்துகிறார்கள். இந் நபர்களின் மனைவியர் சிலர் அரைகுறை இல்லறத்துடன், பெட்டி படுக்கையைத் தூக்கிக் கொண்டு சீதனம் கோரி பிறந்த வீட்டுக்கு வருவதையும் காண்கிறோம். சீதனம் வாங்கியவர் கூட தனக்கு இடையிடையே ஏற்படும் பொருளாதார முடக்கத்தை நிவர்த்தி செய்வதற்காக இச் செயலை செய்கிறார்கள். இப்படிப்பட்ட சீதனப் பிசாசு எத்தனையோ பெண்களின் வாழ்க்கையையும் இருண்டதாக்கி வருகிறது.

இது மட்டுமன்றி பெண்கள் திருமணத்தின்போது கழுத்தில் ஏற்கும் தாலியானது அவர்களுக்கு கணவர்களால் போடப்படும் விலங்கே. அன்றிலிருந்து கணவர்களின் மேலாதிக்கம் இப் பெண்கள் மேல் படர்கிறது. பெற்றோர்களின் கீழ் இப் பெண்கள் எப்படி வாழ்ந்தார்களோ அதைவிடக் கேவலமாகவே கணவர்களின் கீழ் வாழ்கிறார்கள். கணவரின் நண்பர்கள் வந்தால் வெளியே வர முடியாது. கணவனுக்கு எது பிடிக்குமோ அதைத்தான் செய்ய வேண்டும். எந்தக் காரியத்திற்கும் கணவனே முடிவெடுக்க வேண்டும். இவ்வாறு பெண்கள் தமது ஆசைகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு பிள்ளை பெறுதல், பிள்ளைகள், கணவன் பராமரிப்பு போன்றவற்றில் இயந்திரமாகவும் ஏனையவற்றில் எவ்வித இயக்கமுமற்ற சடப்பொருளாகவுமே வாழ்கின்றனர். இவ் வாழ்க்கையில் இடையில் கணவன் இறந்தால் அன்றிலிருந்து 'விதவை' எனும் பெயருடன் சமூகத்திலிருந்து அந்நியப்படுத்தப்படுகின்றாள். இவளை மறுமணம் புரியவோ, ஊரில் நடக்கும் 'நல்ல' காரியங்களில் காரியங்களில் கலந்து கொள்ளவோ அனுமதியில்லை. ஏன் சொந்த வீட்டில் தன் பிள்ளைக்கு நடக்கும் 'நல்ல' விடயத்தில் கூட தனிமைப்பட்டு நிற்க வேண்டியுள்ளது. சமூகத்தினுடைய கட்டுப்பாடுகளை மீறி 'விதவை' மறுமணம் புரிந்தால் அவளை விபச்சாரியாகவே சமூகம் கருதுகிறது.

இவ்வாறான அடக்குமுறைகள் எல்லாம் வெட்ட வெளிச்சமாக பெண்களின் மேல் திணிக்கப்பட்டும் எமது பெண்கள் தம்மைச் சுற்றி ஒன்றும் நடக்காதது போல் ஏனோதானோவெனவே வாழ்கின்றனர். இந்நிலை மாறி பெண்கள் எல்லோரும் சமூக அங்கத்துவராக வாழப் போராட வேண்டும். நிலப்பிரபுத்துவ—முதலாளித்துவ சமூகப் பொருளாதார அமைப்புக்கு எதிராக ஓரளவு வசதியோடு வாழும் பெண்களும் பாட்டாளி வர்க்கப் பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இணைந்து போராட முன்வர வேண்டும். இப் போராட்டமானது உளுத்துப்போன உண்ணாவிரதங்களுக்கூடாகவோ அல்லது சீர்திருத்த நிறுவனங்களுக் கூடாகவோ மேற்கொள்ளப்படுதல் நிரந்தர மாற்றத்திற்கு வழிவகுக்காது. இது அடக்குமுறையை அதிகமாக்கப் பயன்படுவதுடன், மேற்குறிப்பிட்ட போராட்டங்கள் பயனற்றுப் போக, அடுத்த கட்டப் போராட்டத்திற்கெதிரான சக்தியையும் வளர்த்துவிட்டுவிடும். எனவே பெண்கள் அடக்குமுறையற்ற நிலையில் வாழ அதாவது சமூகத்தில் அங்கத்துவமுடையவர்களாக வாழ வேண்டுமானால் இந் நிலப்பிரபுத்துவ—முதலாளித்துவ உற்பத்தி உறவுமுறைகளைத் தகர்த்தெறிந்து ஒரு சமூகத்திற்கான உற்பத்தியில் பங்கெடுப்பதன் மூலமே இப் பெண் அடக்கு முறைகளை கல்லறைக்கு அனுப்பலாம்.

# அஞ்சலி

- கருடன் -


நண்பனே
ரத்தத்தின் ரத்தமே
சொந்தமே என்றெல்லாம்
அழைப்பதெனில் 'உணர்ச்சிக'ளாகிவிடும்
உங்கள் நினைவுதினங்கள்.

நினைவுதினங்களிலே மட்டும் அல்ல
நினைவுகளிலே தொடர்ந்து
வருவதனால் பெருமை
உங்களுக்கு.

சிறுமைதனை அடைகின்றேன்
சிலசமயம் உங்கள் நினைவுகளை
நானும் மறந்துவிடுவதனால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்பவும் குறுக்கெழுத்துப் போட்டி வைக்கலாமே!

இடமிருந்து வலம்

1. பாட்டாளிகளின் ஒரே சொத்து.
3. தொழிலாளர்களின் உணர்வுகளை மழுங்கடிப்பதற்காக முதலாளித்துவ அரசுகளால் ஊக்குவிக்கப்படும் போதைப் பொருள். மாறியுள்ளது.
5. சிக்கலாக உள்ள இந்த அமைப்பு தகர்க்கப்பட வேண்டிய சமூகஅமைப்பாகும்.
7. இதுவும் போதையூட்டும்.
8. இந்த அடிப்படையில் மக்கள் போராட வேண்டிய திசையைக் காட்டியது மாக்சிசம்.

மேலிருந்து கீழ்

1. இது தனியொருவருக்கென்றில்லாமல் பொதுவாக்கப்பட வேண்டும்.
2. வர்க்கப் போராட்டத்தின் மூலம் இது படைப்போம்.
4. இதைத் தேடுவதால் வர்க்கப் போராட்டம் முனைப்புப் பெறுகிறது.
6. முதலாளிகள் மூலதனங்களை இப்படி வைத்துள்ளார்கள். கடைசி எழுத்தைக்கூட தராத இவர்களிடம் அடித்துப் பறிக்காமல் என்ன செய்வது?

விடைகளை முயற்சி செய்து யூகித்துப் பாருங்கள். இயலவில்லையாயின் மாத்திரம் வேறொரு பக்கத்திலுள்ள விடையைப் பாருங்கள்.



# இலக்கியச் சந்திப்பு

- ஜோசப் -

இலக்கியச் சந்திப்புத்தொடரின் மூன்றாவது சந்திப்பு நொய்ஸ் நகரில் 18.03.89இல் நடைபெற்றது. இச் சந்திப்பில் சுமார் 60 பேர் பங்குபற்றினர். இச் சந்திப்பில் 'ஏலையா', 'வெகுஜனம்', 'தேனி' 'சிந்தனை', 'புதுமை', 'தூண்டில்' சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுக்கள்கலந்து கொண்டன. 'கலை விளக்கு', 'வண்ணத்துப் பூச்சி', 'நமதுகுரல்' சஞ்சிகையின் ஆசிரியர்கள் பங்குபற்றவில்லை. கவிஞர் சேரன், விரிவுரையாளர் பத்ம மனோகரன் ஆகிய இருவரும் கலந்துகொண்டனர்.

வழமைபோல் ஒரு மணித்தியாலத் தாமதத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. தற்காலிகச் செயற்குழுவின் சார்பில் காந்தன் நிகழ்ச்சிகளை ஆரம்பித்தார். இலக்கியச் சந்திப்பிற்கான செயற்குழு தற்காலிகமாக இல்லாமல் ஸ்தாபனப்படுத்தப்பட்ட நிரந்தரக் குழுவாக இருக்க வேண்டுமென்றும், இக் குழுவில் இலக்கிய நேர்மையுடைய, முற்போக்கான சிந்தனையுடையவர்கள் மட்டுமே அங்கம் வகிக்க வேண்டுமென்றும் ஜீவிலோகன் விமர்சன அறிக்கையொன்றை வாசித்தார். இந்த அறிக்கை வாசிப்பின் பின் சுய அறிமுகமும் தொடர்ந்து சஞ்சிகை ஆசிரியர்களின் கருத்துகளும் இடம் பெற்றன. இதன்பின்வாசகர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்தார்கள்.

அனைவரும் ஒன்றிணைந்து ஒரு பொதுவான பத்திரிகை வெளியிட வேண்டுமென்றும், செய்திகள் நடுநிலையாக இருக்க வேண்டுமென்றும் பலர் கூறினார்கள். பல்வேறு கருத்துகளைக் கொண்டவர்கள் இணைந்து ஒரு சஞ்சிகையையோ, புத்தகத்தையோ வெளியிடுவது சாத்தியமில்லையென்றும், ஒரு செய்திப் பத்திரிகையை பொதுவானதாகப் பலர் இணைந்து வெளியிடுவது ஓரளவுக்கு நடைமுறைச் சாத்தியம் என்றும் தெரிவிக்கப்பட்டது. இலங்கை நிலைமைகளுக்கு மட்டுமே தனித்து முக்கியத்துவம் கொடுக்காமல் தற்போது வெளிநாடுகளில் உருவாகிவரும் புதிய அகதிச் சந்ததியினரைப் பற்றியும், அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டுமென பத்மமனோகரன் தெரிவித்தார். இங்கு வெளியாகும் சஞ்சிகைகளில் ஒவ்வொரு சஞ்சிகைகளும் எவ்வளவு பிரதிகள் விற்பனையாகின்றன? சஞ்சிகைகள் வாசகர்களைச் சென்றடைய என்ன வசதிகளைச் செய்துள்ளீர்கள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வாசகர் கேட்டதற்கு யாரும் பதிலளிக்கவில்லை.

நிகழ்ச்சி ஆரம்பத்திலிருந்து நடப்பவற்றை வீடியோ பதிவு செய்து கொண்டிருப்பதை தூண்டில் ஆசிரிய குழுவினர் கண்டித்தனர். இப்படி பதிவு செய்து பிரச்சாரம் செய்வதையோ, விற்பனைக்கு அனுப்புவதையோ விரும்பவில்லையெனத் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் பங்குபற்ற முடியாதவர்களும் நடந்தவற்றை அறிய வேண்டுமென்பதற்காகவே வீடியோவில் பதிவு செய்யப்படுவதாகவும், பிரச்சாரத்திற்காக அல்லவென்றும் பதிலளிக்கப்பட்டது. நிகழ்ச்சிகளை வீடியோவில் பதிவு செய்வதை பலர் ஆதரித்தனர். நிகழ்ச்சிகள் முடியும்வரை வீடியோவில் பதிவு செய்யப்பட்டது.

பெண்ணடிமைத்தனம் பற்றி முதலிரண்டு இலக்கியச் சந்திப்பிலும் பேசப்பட்டது, பல சஞ்சிகைகளிலும் இதையொட்டிய ஆக்கங்கள் வந்துள்ளன எனவே இங்கு வந்திருக்கும் பெண்கள் தமது கருத்துகளைத் தெரிவிக்க முன்வரவேண்டும் என்று 'சிந்தனை' ஆசிரியர் கேட்டுக் கொண்டார். இக் கோரிக்கையையடுத்து 'நமது குரல்' சஞ்சிகையின் பன்னிரண்டாவது வெளியீட்டில் பிரசுரமான பார்த்திபனின் 'ராதா பெரிசானபின்' சிறுகதையைப் பற்றிய விமர்சனத்துடன் பெண்கள் தமது கருத்துகளைக் காரசாரமாக ஆரம்பித்தார்கள்.

மேற்படி சிறுகதையில் பெண்களின் இயற்கை மாற்றங்களை அப்பட்டமாக வர்ணித்திருப்பது அருவருப்பாய் உள்ளதாகவும், பெண்களைக் கேவலப்படுத்துவதாகவும் குறிப்பிட்ட பெண் வாசகரொருவர் இதே போன்று 'தூண்டில்' பன்னிரண்டாவது கலத்தில் 'ஓ விபச்சாரி' என்ற கவிதைக்கான ஓவியம் அசிங்கமாயும் பெண்களைக் கேவலப்படுத்துவதாகவும் கூறி இதே போல் தூண்டிலில் வெளியான 'விலைமகன்' என்ற கவிதைக்கு ஏன் அப்படியொரு ஆணின் படத்தை வரையவில்லையென்று கேட்டார். இந்த வாசகரால் குறிப்பிட்ட 'ராதா பெரிசான பின்' என்ற சிறுகதையில் எந்த அருவருப்பும் இல்லையென்றும், அக் கதையில் பெண்களுக்குக் கிடைக்காத சுதந்திரங்களைப் பற்றி நன்றாகச் சித்தரித்திருப்பதாகவும் வேறு பெண் வாசகர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். தொடர்ந்து பெண்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துகளில் சில—

> பெண்ணடிமையைத் தகர்ப்போம், பெண்களுக்குச் சுதந்திரம் கொடுப்போம் என்றெல்லோரும் சொல்லிக் கொள்கிறார்களே தவிர அப்படியெதையும் நடைமுறையில் செய்வதில்லை.
>
> ஆணும், பெண்ணும் இரண்டு வேறுபட்ட வர்க்கங்களல்ல.
>
> ஆண்கள் வெளியில் கதைக்கும்போது தாங்கள் பெண்களை அடிமைப்படுத்தவில்லையென்று கூறுகிறார்கள். ஆனால் வீட்டில் சமைப்பதிலிருந்து குழந்தைக்கு 'பம்பேர்ஸ்' மாற்றுவது வரை பெண்கள்தான் செய்ய



> வேண்டும்.
>
> பெண்களைப் படிக்கவிடுவதில்லை. வெளியில் போக விடுவதில்லை.
>
> ஆண்களைப் போல உடையணிந்தால் அடிமைத்தனம் நீங்கிவிட்டதாகப் பல பெண்கள் நினைத்துக் கொள்கிறார்கள்.

பெண்களின் கருத்துகளையடுத்து இதைப் பற்றி ஆண்களும் கருத்துத் தெரிவித்தனர். இதையடுத்து எம். பி. கோணேஷின் 'சர்வதேச சங்கீத சுரத்தட்டு' என்ற புத்தகமும், ஒலிப்பதிவு நாடாவும் வெளியிடப்பட்டன. இசைத்துறையில் இது நல்ல முயற்சியென்று சிலர் பாராட்டினாலும் இந்நூலை முற்கூட்டியே படித்திராததால் அதைப் பற்றி எவரும் விமர்சனம் செய்யவில்லை.

தங்கள்முன் வைக்கப்பட்ட விமர்சனங்களுக்காகப் பதிலளிக்கையில் 'ராதாபெரிசானபின்' என்ற சிறுகதைபற்றி பார்த்திபன் தனது கருத்தைத் தெரிவிக்கும்போது "ஒரு தாய் சேலையை விலக்கி குழந்தைக்குப் பால் கொடுக்கிறாள் என்றால் அதில் தாய்ப் பாசத்தையும் பார்க்கலாம். விலக்கப்பட்ட சேலைக்குள்ளால் என்ன தெரிகிறதென்றும் பார்க்கலாம். ஆகவே பார்வையில்தான் ஆபாசமே தவிர எழுத்தில் அல்ல" என்று கூறி 'ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்' என்ற ஜெயபாலனின் கவிதைத் தொகுப்பிலிருந்து ஆறு வரிகளைப் படித்துக் காட்டினார். தூண்டிலில் வந்த ஓவியம் பற்றித் தெரிவிக்கப்பட்டபோது ஆடை களைந்து அலங்கோலப்படுத்தியது பெண்களையல்ல, பெண்களுடைய பிரச்சினையைத்தான் என்று கூறப்பட்டது.

அடுத்தாக நான்காவது இலக்கியச் சந்திப்பை ஸ்ருட்காட் நகரில் வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டதுடன் இதற்கான தற்காலிகச் செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. இதற்காக அதிகளவு நேரம் எடுத்துக் கொள்ளப்பட்டது.


நிகழ்ச்சிகளின் இறுதியாக சேரனின் கவிதா நிகழ்வு இடம் பெற்றது. இதுவே இலக்கியச் சந்திப்பை சிறப்பித்த மற்றொரு அம்சம் என்றும் கூறலாம். தனது கவிதைகளை உயிரோட்டமாக சேரன் வாசித்தபோது அனைவருமே உணர்ச்சிவசமாகியிருந்தார்கள். இலங்கையைத் தனது குரலாலும், கவிதைகளாலும் அங்கிருந்தவர்களின் கண்முன் சேரன் கொண்டு வந்தார்.

பின்
அட்டைக் கவிதை: சொல்லாத சேதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்




ஆசிரியர் குழு தேனீக்கள்

முகவரி G.Kangatharan
Schulstr 17
7016 Gerlingen

சந்தா 15,- டி.எம் (ஒரு வருடம்)

* 1989 ஜனவரி மாதத்திலிருந்து வெளிவருகிறது.
* இரண்டு மாதத்திற்கொருமுறை வெளிவரும் சஞ்சிகை.
* கட்டுரை, பேட்டி, கவிதை, சிறுகதை, பத்திரிகைச் செய்திகள் என்பன இடம்பெற்றுள்ளன.



# செய்திக் குறிப்பு

12.02.89 (தே.நி.செய்திப் பிரிவு)

பொலிகண்டியில் வீடொன்று ரொக்கற் லோஞ்சரால் தாக்கப்பட்டதில் ரவிகரன், கலா, எஸ்.பூரம் ஆகியோருடன் இன்னுமொரு பெண்ணும் கொல்லப்பட்டார்.

15.02.89 (தே.நி.செய்திப் பிரிவு)

ஈரோஸ் உறுப்பினரான மோகன் ஈ.பி.ஆர்.எல்.எவ்வால் கைது செய்யப்பட்டு இந்திய இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டார். பின்னர் சிகிச்சைக்காகப் பலாலிக்கு மாற்றப்பட்டார்.

மீசாலையில் ஈரோஸ் பிரதிநிதியான எட்வேட் மீதான தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். எட்வேட் மயிரிழையில் தப்பினார்.

16.02.89 (தே.நி.செய்திப் பிரிவு)

சுன்னாகத்தில் ஈரோஸ் அலுவலகம் ஈ.பி.ஆர்.எல்.எவ்வால் சோதனையிடப்பட்டு 7பேர் கைது செய்யப்பட்டு இந்திய இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மல்லாவியில் ஈ.என்.டி.எல்.எவ் உறுப்பினர் மோகன் கொல்லப்பட்டார்.

18.02.89 (தே.நி.செய்திப்பிரிவு)

ஈழமுரசு தினசரியின் முன்னாள் வெளியீட்டாளர் எம்.அமிர்தலிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

19.02.89 (தே.நி.செய்திப் பிரிவு)

6 ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் ஈரோஸால் திருகோணமலையில் கொல்லப்பட்டனர்.

இரணைமடுவில் 1 ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் கொல்லப்பட்டார்.

பெப்ரவரி 89 (தே.நி.செய்திப் பிரிவு)

நல்லதங்கச்சி என்பவர் பருத்தித்துறையில் கொல்லப்பட்டார்.

வண்ணார்பண்ணையில் எல்.காசிநாதன் என்பவர் கொல்லப்பட்டார்.

பாண்டியன்தாழ்வில் தேவநாயகம் என்பவர் கொல்லப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.02.89 (தெ.நி.செய்திப் பிரிவு)
நல்லூரில் ஆர்.தேவராஜா என்பவரும், கந்தர்மடத்தில் எஸ்.ரவிச்சந்திரன் என்பவரும் கொல்லப்பட்டனர்.

தலைமன்னாரில் 4 ரெலோ உறுப்பினர்களும், 2 ஈரோஸ் உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர்.

21.02.89 (தெ.நி.செய்திப் பிரிவு)

வாழைச்சேனையில் 2 ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பில் 4 ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

நெல்லியடி–கொடிகாமம் வீதியில் அருளப்பு என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

23.02.89 (தெ.நி.செய்திப் பிரிவு)

கரவெட்டியில் நடைபெற்ற செல் தாக்குதலில் வி.புஸ்பவதி என்பவர் கொல்லப்பட்டார். நவிண்டலில் பல வீடுகள் சேதமாக்கப்பட்டன.

திருநெல்வேலியில் இந்திய இராணுவத்தின் மீதான தாக்குதலின் பின் 8 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

மயிலிட்டி கடலில் வைத்து சண்முகராஜா என்பவர் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

23.02.89 (தெ.நி.செய்திப் பிரிவு)

கூளை நேதாஜி வீதியில் இந்திய இராணுவம் தேடுதல் நடாத்தியது. இதன்போது 25 வீடுகள் எரிக்கப்பட்டன. பல வீடுகள் சேதமாக்கப்பட்டன. பல பெண்களும் தாக்கப்பட்டனர். பல மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வெலிஓயாவில் 8 சிங்களவரும், மொறவேவாவில் 37 சிங்களவரும் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைகள் தொடர்பாக எல்.ரி.ரி.ஈ சந்தேகிக்கப்படுகிறது.

24.02.89 (தெ.நி.செய்திப் பிரிவு)

ஓமந்தையில் செல்லத்துரை என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தம்புலவில் 3 ரெலோ உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

25.02.89 (தெ.நி.செய்திப் பிரிவு)

பூஸாவிலிருந்து விடுதலையான தேவராசா என்பவர் வவுனியாவில் கொல்லப்பட்டார்.

வவுனியாவில் ராஜேஸ்வரன் என்ற மாணவரும், சந்திரசேகர் என்பவரும் கொல்லப்பட்டனர்.

ஏறாவூரில் ரி.விக்னேஸ்வரமூர்த்தி என்பவர் கொல்லப்பட்டார்.

26.02.89 (தெ.நி.செய்திப் பிரிவு)

ஆர்.மகேந்திரன் என்பவர் நல்லூரில் கொல்லப்பட்டார்.

27.02.89 (தெ.நி.செய்திப் பிரிவு)

கரவெட்டியில் கே.ராஜசுந்தரம் என்பவர் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

28.02.89 (வீரகேசரி)

லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், பிரபல அரசியலமைப்பு சட்ட வல்லுநருமான கொல்வின் ஆர்.டி.சில்வா 27.02.89 இல் காலமானார்.

02.03.89 (வீரகேசரி)

அவிசாவளையைச் சேர்ந்த எனிண்டன் தோட்டத் தொழிலாளர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர்.

மாங்குளம் மாமூலைக் காட்டுக்குள்ளிருந்து செல்வரத்தினம் என்பவரின் பிணம் கண்டெடுக்கப்பட்டது.

03.03.89 (வீரகேசரி)

ஏறாவூர் பொலிஸ் பகுதியில் முத்தையா துரைராசா என்பவரும், களுவன்கேணி வாசியான வேறொரு குடும்பஸ்தரும் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

திருகோணமலையில் பரீட்சை எழுதச் சென்ற எஸ்.ஜெகலோகன், எஸ்.அருள்சந்திரன் என்ற இரு மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அனுராதபுரத்தில் அழகையா இரவீந்திரன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் எஸ்.ஓ.ரிச்சார்ட் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

04.03.89 (வீரகேசரி)

பொலனறுவையில் இரு தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். எஸ்.மயில்வாகனன் என்பவர் குண்டாந்தடியால் தாக்கிக் கொல்லப்பட்டார்.

அராலி வடக்கில் இந்திய இராணுவத்திற்கும் போராளிகளுக்குமிடையிலான மோதலில் குடும்பஸ்தரான சின்னத்தம்பி கொல்லப்பட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06.03.89 (வீரகேசரி)

அம்பாறை மாவட்டம் கிங்குரானைப் பகுதியில் இரு பெண்கள் உட்பட நாலு சிங்கள கிராமவாசிகள் இனம் தெரியாதோரால் கொல்லப்பட்டனர்.

07.03.89 (ஐலண்ட்)

முஸ்லீம்களுக்கும், தமிழர்களுக்கும் தனித்தனியாக இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வேண்டுமென்று கோரி 600க்கும் மேற்பட்ட தமிழர்கள் கல்முனையில் ஊர்வலம் நடத்தினர்.

07.03.89 (வீரகேசரி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆண்டாங்குளம், குமுழமுனை, அலம்பில், செம்மலை ஆகிய பகுதிகளில் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

09.03.89 (வீரகேசரி)

குமுழமுனையில் சுமார் 50 வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. இந்த அசம்பாவிதங்களால் குமுழமுனை, நித்திகைக்குளம் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறி முல்லைத்தீவு, தண்ணீருற்றுப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவரும், த.வி.கூ. உறுப்பினருமான சம்பந்தமூர்த்தி இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாண அமைச்சர் தயான் ஐயதிலக தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். தற்போதைய வடக்கு, கிழக்கு மாகாண அரசாங்கத்தை ஒரு காபந்து நிர்வாகமாகவே கருத வேண்டும் என்றும், வடக்கு தமிழ் மக்களின் உணர்வுகள் முழுமையாகப் பிரபலிக்கக்கூடியதற்கு ஏதுவாக மாகாணசபைக்கு இடைக்காலத் தேர்தல் ஒன்றை நடாத்துவது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ஸ்ரான்லி விஜேசுந்தரா இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பொலனறுவையில் கொல்லப்பட்ட கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவனான நடேசன் மணிவண்ணனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதே தினத்தில் மட்டக்களப்பு நூல்நிலைய பிரதம பொறுப்பாளரான செல்வராஜாவும் கொல்லப்பட்டார்.

'இந்திய அமைதிப்படையின் வருகையின் பின்னர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிச்சயமான பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இனியும் நாம் ஆயுத வழியைப் பின்பற்றாது அரசியல் ரீதியாக தீர்வு காணவே எண்ணுகிறோம். தமிழீழ விடுதலைப்புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகபோக பிரதிநிதிகள் என்பதை நாம் ஏற்கவில்லை. ஆனால் அவர்கள் மிகவும் முக்கியமான பிரதிநிதித்துவம் பெற்றவர்கள்எனக் கருதுகிறோம்.' – ஈரோஸ் உறுப்பினர் சங்கர் ராஜி.

12.03.89 (வீரகேசரி)

வயிற்றோட்ட நோயால் இலங்கையில் நாளொன்றுக்கு சராசரி ஆறு குழந்தைகள் இறக்கின்றன.

13.03.89 (வீரகேசரி)

தென் பகுதியில் 500 பேர் கைது செய்யப்பட்டு பூஸா முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

உடையார்கட்டு, வள்ளிபுலம் பகுதியில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான இந்திய இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் இராணுவ நடவடிக்கைகளினால் நூற்றுக்கணக்கான வீடுகள் உடைக்கப்பட்டும், உடைமைகளுடன் எரிக்கப்பட்டுமுள்ளன.

வட்டக்கச்சியில் இந்திய இராணுவத்தின் தேடுதலின்போது மணிவண்ணன் என்பவர் சயனைட் அருந்தி மரணமானார்.

11.03.89 (வீரகேசரி)

குமுழமுனை வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. இப் பகுதியைச் சேர்ந்த பலர் கைதுசெய்யப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலிருந்து சுமார் 5,000 பேர்தமது வீடுகளைக் கைவிட்டு கொழும்பு, காலி, கண்டி, பொலன்னறுவை, குருநாகல் முதலிய பகுதிகளுக்குச் சென்றுவிட்டனர். இவ்விரு மாவட்டங்களிலுமிருந்து இதுவரை 1,000 பேர் காணமல் போயுள்ளனர்.

14.03.89 (வீரகேசரி)

மடுவில் ஈரோஸ் உறுப்பினர்களான அருளானந்தம் சில்வா, சௌந்தரராஜன்செல்வராஜ் ஆகிய இருவரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் பிரஜைகள் குழுச் செயலாளர் முத்தையா சபாரத்தினம் இனம்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

15.03.89 (வீரகேசரி)

இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் மொத்தம் 2,114 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.03.89 (வீரகேசரி)

புத்தளம் நகருக்கு அண்மையில் உள்ள மணல்குண்டு என்னுமிடத்தில் 193 குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இப் பகுதி ஏழை முஸ்லீம் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இக் குடும்பங்கள் தற்காலிக வீடுகளை அமைத்து குடியேறவிருந்த சமயம் உதவி அரசாங்க அதிபர் உட்பட, அரச உயரதிகாரிகள் வந்து அங்கு யாரும் குடியேறக் கூடாதெனவும், அப் பகுதியில் அரச அதிகாரிகளுக்கான விடுதிகள் அமைக்கப்பட இருப்பதாகவும் கூறியுள்ளனர். இதனை மீறி முஸ்லீம் குடும்பங்கள் குடியேறியபோது பொலிசாரால் விரட்டப்பட்டு குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன.

18.03.89 (வீரகேசரி)

யாழ்ப்பாணத்தில் எஸ்.ஜி.ராஜன், சார்லஸ் என்ற சரபன், குட்டி என்ற பிரேமதாஸ் ஆகியோர் இனம் தெரியாதோரால் கொல்லப்பட்டனர்.

இந்திய இராணுவத்தால் விடுதலை செய்யப்பட்ட புளொட் உறுப்பினர் நிரஞ்சன் வில்லியம் வவுனியாவில் இனம்தெரியாதோரால் கொல்லப்பட்டார்.

இந்திய இராணுவத்துடனான மோதலில் விடுதலைப்புலி உறுப்பினர்களான ரமணன் யாழ்ப்பாணத்திலும், விக்கிரன் வவுனியாவிலும் கொல்லப்பட்டார்கள். காத்தான்குடியில் விடுதலைப்புலி உறுப்பினரான சோமன் இந்திய இராணுவத்திடம் சரணடைந்துள்ளார்.

கோண்டாவில் பகுதியில் இந்திய இராணுவத்தின் தேடுதல் வேட்டையின்போது சாந்தன், குட்டி, செல்வம் என்ற மூன்று விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

19.03.89 (வீரகேசரி)

'ராஜீவுடனான பேச்சுவார்த்தைகள் பயனளிக்குமாயின் இந்திய அமைதிப்படையினுல் போர் நிறுத்தமும், தமிழீழ விடுதலைப்புலிகளால் ஆயுதங்களை கீழே வைத்தலும் ஒருங்கே நடக்கும்' - மு.கருணாநிதி

21.03.89 (வீரகேசரி)

மருல்கெலவில் எஸ்.நடராஜா என்பவர் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

யாழ் ஈச்சமோட்டை பேக்கரி உரிமையாளர் சன்.புவனேந்திரராஜா இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

# உலகச் செய்திகள்

தொகுப்பு த.பூபாலச்சந்திரன்

அலாஸ்கா பகுதியில் மின்சுளியில் அகப்பட்டு விபத்துக்குள்ளான கப்பலிலிருந்து 100 மில்லியன் லீற்றர் எண்ணெய் கடலுடன் கலந்துள்ளது. இதனுல் 100மைல் சுற்றளவிலுள்ள கடல் பிராணிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்கு ஜேர்மனியின் நூறன்பேர்க் நகரத்தில் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து வந்த ஜேர்மன் பரம்பரையைச் சேர்ந்த அகதிகள் தங்கியிருந்த கட்டிடத்திற்கு குண்டு வீசப்பட்டது. எட்டுப் பேர் காயமடைந்தனர். கட்டிடம் பலத்த சேதமடைந்தது. மேற்கு ஜேர்மனியில் இருக்கும் வெளிநாட்டவர்களுக்கு குறிப்பாக அகதிகளுக்கெதிரான நாஸிகளின் தாக்குதல் பரவலாக நடைபெற்று வருகிறது.

கெயிட்டியில் இராணுவப் புரட்சியேற்பட்டு பின்னர் அது முறியடிக்கப்பட்டது.

நமிபியா சுதந்திரத்திற்கு ஆயத்தமாகும் தருணத்தில் அங்கோலாவில் இருந்துவந்த சுவாப்போ கெரில்லாக்கள் நமிபிய, தென்னுபிரிக்கப் படைகளுடன் மோதின. இதில் 120 கெரில்லாக்களும், 20 அரச படையினரும் கொல்லப்பட்டனர். தற்போது இப்பகுதிக்கு ஐ.நா.வின் சமாதானப்படை சென்றுள்ளதுடன் ஆயுதங்களை ஒப்படைக்கும்படி கெரில்லாக்களை கேட்டுள்ளனர்.

மேற்கு ஜேர்மனியில் எல்ப ஆற்றில் பொட்டாசியம் சைனெட் நச்சுத் திரவஉறைகளை ஈனந்தெரியாதோர் வீசியுள்ளனர். இதனுல் மீன்களை உண்ண வேண்டாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

துருக்கியில் எதிர்கட்சி அங்கத்தவர் பாராளுமன்றத்திற்குள் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

'சாத்தானின் வரிகள்' என்ற சமஉ்டியின் புத்தகத்திற்கு ஆதரவு தெரிவித்தார்கள் என்பதனுல் பெல்ஜியத்தில் இரு முஸ்லீம் தலைவர்கள் பள்ளிவாசலுக்குள் வைத்துப் படுகொலை செய்"ப்பட்டார்கள்.

பர்மா படைகள் தனிநாடுகோரி யுத்தம் செய்யும் கரான்ஸ் சிறுபான்மை இனத்தவரின் கெரில்லாத் தளங்களைக் கைப்பற்றினர். இவர்கள் 40 வருடங்களாக தனிநாடு கோரி யுத்தம் செய்கின்றனர். பர்மா அரசிற்கு சிங்கப்பூர் அரசு நவீன ஆயுதங்களைக் கொடுத்து உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஷ்யப் புரட்சிக்குப் பின் முதல் முறையாக ரஷ்யாவில் மக்கள் தங்கள் விருப்பப்படி தேர்தலில் நிற்கும் அங்கத்தவர்களை தெரிவு செய்யும் வாய்ப்புகொடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்தப் பிரதிநிதிகளில் அதிகமானோர் கம்யூனிஸ்ட் ஆட்சியாளராலேயே தெரிவு செய்யப்பட்டு தேர்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் ஆளும் கட்சிக்கும், கெரில்லா இயக்கங்களுக்கும் இடையில்கடும் சண்டை நடக்கிறது. கெரில்லாக்களுக்கு பாகிஸ்தான், ஈரான் அரசுகள் உதவுகின்றன. இலட்சக்கணக்கான மக்கள் மேலும் அகதிகளாக பாகிஸ்தானுக்குள் புகுந்துள்ளனர். அரசபடைகளால் கைப்பற்றப்பட்ட பாகிஸ்தானிய இராணுவத்தினர் மக்களுடைய பார்வைக்காக கொண்டு திரியப்பட்டனர்.

வெய்ரூனில் முஸ்லீம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்குமிடையிலான சண்டையில் பலர்கொல்லப்பட்டனர்.

சூடானில் அவசர உதவி கிடைக்காவிடில் இவ்வருட முடிவுக்குள் ஒரு இலட்சம் மக்கள் பசிப்பிணியால் இறப்பர் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிற்சலாந்தில் சூரிச் மாநிலத்தில் வீடுகள் பற்றாக்குறைக்கு நிவாரணம் கோரி 3,000க்கு மேற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து பொலிசாருடன் மோதினர். கடைகளும் உடைக்கப்பட்டன.

25,000 வியட்னாம் அகதிகள் கொங்கொங்கில் முள்ளுக் கம்பி வேலியால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வெனிசுலாவில் விலைவாசிகள் கூடியதற்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்த பொது மக்களில் இதுவரை 350பேர் கொல்லப்பட்டுள்ளனர். 3,000பேர்வரை காயமடைந்தனர். இதன்பின் அரசாங்கம் சில சலுகைகளை வழங்க முன்வந்துள்ளது.

வியட்னாமின் வடக்கு, மத்திய பகுதிகளில் இம்முறை வேளாண்மை குறைந்தமையினால் 10 இலட்சம் மக்களுக்கு மேல் பட்டினியால் வாடுகின்றனர்.

பெல்ஜியத்தில் டச் மொழி பேசும் மக்கள் தனிநாடுகோரி ஆர்ப்பாட்டம்செய்தனர். பொலிசார் கண்ணீர்ப் பிரயோகம், தடியடி செய்து கலைத்தனர்.

எதியோப்பியாவில் மூளைவியாதி வேகமாகப் பரவி வருகிறது. இதுவரை 10,000 பேர் இறந்துள்ளனர். இதில் மோசமாகப் பாதிக்கப்பட்டோர் 3வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்டோரே.

சர்வதேச நாணய நிதிச்சபை இலங்கைக்கு 114 மில்லியன் டொலர் பொருளாதார உதவியாகக் கொடுக்க இசைந்து 44மில்லியன் டொலர்வரை கொடுத்தது. ஆனால் இலங்கையில் பொருளாதாரநிலை மிகவும் கீழ்நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாகக் கூறி மிகுதியைக் கொடுக்க மறுத்துவிட்டது.



# மாணவர்களின் மரணம்

மாசி மாதம் 2ஆம் திகதி காலை 11.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் அமைதிப் போராட்டத்திற்கு இந்திய அமைதிப்படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இத் துயரகரமான சம்பவத்தின்போது தனபாலசிங்கம் சத்தியேந்திரா (முதலாம் வருடம் மருத்துவ பீடம்), சதாசிவம் ஜெகநாதன் (முதலாம் வருடம் விஞ்ஞானபீடம்) ஆகிய இரு மாணவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இச் சோகச் சம்பவமானது பாலஸ்தீனியா மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடும்இஸ்ரேல், கறுப்பு இன மக்களை ஒடுக்குகின்ற தென்னாபிரிக்கா போன்ற மூர்க்கத்தனமான செயற்பாடுகளை நினைவிற்கொண்டு வருகிறது. மேற்கூறிய அரசுகளின் செயல்களை மிக வன்மையாகக் கண்டித்து தன்னை உலகின் மிகப் பெரிய ஜனநாயகநாடு என மார்தட்டிக் கொள்ளும் இந்தியாவின் அமைதிப்படையின் இச் செயற்பாடு மிகவும் விசனத்திற்குரியது. மேற்கூறிய சம்பவம் பல்கலைக் கழகத்திலிருந்து கூப்பிடு தூரத்திலேயே நடைபெற்றது. ஒரு குறுகிய நேர வழிமறிப்புப் போராட்டத்தை மாணவர்கள் பரமேஸ்வராச் சந்தியில் செய்ய முற்பட்டபோது மாணவிகள் உட்படப் பலரும் அமைதிப்படையினரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். பல மாணவமாணவியர் ஜவான்களினால் கத்தியால் காயப்படுத்தப்பட்டனர். பின்வாங்கி ஓடிய மாணவர்களை நோக்கி அமைதிப்படையினர் கற்களை எறிந்தனர். இதன் காரணமாக ஆத்திரமடைந்த சில மாணவர்கள் திருப்பித் தாமும் கற்களால் எறிந்தனர். உடனே இராணுவத்தினர் கண் மூடித்தனமாகச் சுடத்தொடங்கினார்கள்.

முதலாம் திகதி மாலை நடந்த சம்பவத்தின் தொடர்பாகவே அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே மேற்கூறிய வழிமறிப்புப் போராட்டம் தொடங்கப்பட்டது. முன்னையநாள் பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலிற்கு அண்மையில் வந்து கொண்டிருந்த அமைதிப்படையினர் திடீரென நுழைவாயிலை நோக்கிச் சுட்டனர். அப்போது சில மாணவர்கள் விளையாட்டு மைதானத்திலும், சிலர் நூலகத்திலிருந்தும் வந்து கொண்டிருந்தனர். மேலும் பல மாணவர்கள் நுழைவாயில் அருகிலேயும் குழுமியிருந்தனர். இச் சூட்டு சம்பவத்தின்போது பல மாணவர்கள் மயிரிழையிலேயே உயிர் தப்பினார்கள். ஒரு மாணவர் காலில் காயமடைந்தார். பல்கலைக் கழகத்தினுள் இருந்து எந்தவிதமான துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெறவில்லை. இதனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து ஒரு இளைஞனைத் துரத்தியபடி அமைதிப்படையும், துப்பாக்கி ஏந்திய இளைஞர் ஒருவரும் சுட்டுக் கொண்டு சென்றனர். பல்கலைக் கழகத்திலுள்ள சில பகுதிகளைத் தேடுதல் பண்ணியும், மாணவர்களைப் பரிசோதித்த பின்னரும் அவர்கள் வெளியேறினர். இதே வேளையில் பல்கலைக் கழக நுழைவாயிலில் நின்ற படையினர் சிலர் மாணவர்களை நிலத்தில் படுக்கச் செய்து கால்களால் உதைத்துத் துன்புறுத்தினர். மாணவர் பலர் குழுமியிருந்த ஒரு பகுதிக்குள் எதுவித முன்னறிவித்தலுமின்றி சுட்டுக்கொண்டு புகுந்த இச் செயல்களைக் கண்டிக்கும் முகமாகவே மேற்கூறிய வழிமறிப்புப் போராட்டம் நடைபெற்றது.

மாணவர்கள் முன்பு நடாத்திய ஊர்வலங்கள் பலவும் ஒருவித இடையூறுமின்றி மிகவும் அமைதியாகவே நடைபெற்றது குறிப்பிடத் தக்கது. ஆனால் இம்முறை எதுவித முன்னறிவித்தல் வேட்டுக்களும் தீர்க்கப்படாமல் 'கொல்வதற்கென்றே சுடும்' பாணியிலேயே வேட்டுகளைத் தீர்த்துள்ளார்கள். இப்படியான சம்பவங்களின் பின்பு அமைதிப்படையினர் வந்து பொதுமக்கள் தாங்களே தங்களின் விதியைத் தீர்மானிக்கிறார்கள் என்று சந்தர்ப்பத்திற்கேற்ப இராணுவ யுக்திகளைக் காரணம் காட்டி தமது செயல்களை நியாயப்படுத்துவது ஒரு சாதாரண நிகழ்வாகிவிட்டது. இம் முறையும் இராணுவ முகாமுக்கு அண்மையில் நின்று அதைச் சுற்றி வளைக்க முற்பட்டார்கள் என்று போலிக் காரணங்களை முன் வைக்கிறார்கள். இப்படியான சோககரமான சம்பவங்களின்போது நாம் இராணுவ முறைகளையும், காரணிகளையும் பற்றி வீணான விவாதங்களை நடாத்த விரும்பவில்லை. ஆனால் நாம் பின்வரும் மூன்று விடயங்களையும் கவனத்திலெடுக்க வேண்டும்.

இச் தம்பவங்கள் அமைதிப் படையினரும், அவர்களுடன் தொடர்பானவர்களும் நிராயுதபாணிகளான பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் தொடர்ச்சியான ஒடுக்கு முறையின் ஒரு பகுதியே. தனிநபர் கொலைகள், கூட்டாக நடைபெறும் மூர்க்கத்தனமான தாக்குதல்கள், மேலும் அண்மையில் சென். பற்றிக்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற 'யூட்' என்ற இளைஞனின் கொலையும், யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சூட்டுச் சம்பவத்தின்போது கொல்லப்பட்ட ஆசிரியர், மற்றும் சூட்டுக் காயங்களுக்கும், காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்கும் உள்ளான மாணவ, ஆசிரியர்களின் சம்பவங்கள் போன்றன பலவற்றினையும் உள்ளடக்குகின்றது. எந்தவிதமான தூண்டுதல்கள் இருந்தாலும் கூட நிராயுதபாணிகளுக்கெதிரான ஆயுதப் பிரயோகமும், பாதுகாப்பற்ற பொதுமக்கள் மீது ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட இராணுவ பலத்தின் பின்னணியில் தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விடுவது மிகவும் கோழைத்தனமானதும், மனிதாபிமானமற்றதுமான ஒரு செயலுமாகும்.

இந்திய அமைதிப் படையினருக்கு பலமுறை பின்வரும் விடயங்கள் பலத்த எதிர்ப்புகளின் மத்தியிலும் பல்கலைக்கழக வட்டாரங்களால் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லப்பட்டன என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். அவையாவன—

1. பொதுமக்களுக்கு எதிராக அநீதியான முறையில் எதுவித கட்டுப்பாடுமின்றி எதேச்சையான ஆயுதப் பிரயோகத்தில் ஈடுபடல்.
2. ஏதாவதொரு சம்பவம் நடைபெற்ற இடத்தினைச் சுற்றியுள்ள பொதுமக்கள் வயது, பால் வேறுபாடுகளின்றி தாக்கப்படல்.
3. தடுப்புக் காவலில் உள்ளவர்கள் மீதான கொடூரமான, குரூரமான சித்திரவதைகளும், இவ்வாறான நிகழ்வுகளால் 'காணாமற் போனவர்கள்' பட்டியலில் வருவதும்.
4. இச் சம்பவங்களைத் தொடர்ந்து பொதுமக்களின் சொத்துகள் வேண்டுமென்றே அழிக்கப்படுதல்.

மீண்டும் அண்மைக் காலங்களில் பொதுமக்கள் அடர்த்தியாகவுள்ள பிரதேசங்களில் 'செல்' தாக்குதல்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன.

இவற்றின் அடிப்படையில் மக்களுக்கு எதிரான பலாத்கார சம்பவங்களை ஆராய்வதற்கு பாராபட்சமற்ற நீதி விசாரணைக்குழு ஒன்று நியமிக்க வேண்டுமென்று நாம் கோருகிறோம்.

மேலும் இந்திய அமைதிப்படையினரிடமும், இந்திய அதிகாரிகளிடமும் பின்வரும் விடயங்களுக்கு விளக்கம் தருமாறும் கேட்கின்றோம்.

1. ஜனநாயகப் போக்கினை உறுதிப்படுத்தல் என்பது மீண்டும் சாதாரண பொதுமக்களின் கௌரவத்தினை நிலைநிறுத்துவது என்பதிலேயே தங்கியுள்ளது. எனவே மேற்கூறிய செயற்பாடுகள் எவ்வகையில் ஜனநாயகப் போக்கை உருவாக்கி வலுப்படுத்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட இக் காலகட்டத்தில் உதவப் போகின்றது?
2. இவ்வாறான முன்னரே குறிப்பிடக் கூடிய சில தன்மைகளைக் கொண்ட இந்திய அமைதிப்படையானது தொடர்ந்தும் அன்றாட வாழ்க்கையில் ஈடுபடும் மக்கள் மீது எதிர்பாராதவிதமான ஏதாவது சம்பவத்தையொட்டி துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும், கீழ்த்தரமாக நடத்துவதும் தான் தொடரப் போகிறதா?
3. பொதுமக்கள் அனைவரும் பாரிய எதிர்ப்படையாகவே ஐ.கி.கே.எவ் ஆல் பலவேளைகளிலும் கருதப்படுகிறார்கள்.
4. ஏதோ சாதாரண மக்கள் இராணுவ அக்கடமியில் பயிற்சி பெற்றவர்கள் என்ற நினைப்பில் குறிப்பிட்ட சம்பவங்களில் அவர்கள் குறிப்பிட்ட வகையில் செயற்பட்டிருக்க வேண்டும், குறிப்பிட்ட நபர்களைத் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்று பல்வேறு சாக்குப் போக்குகளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி தம்மால் துன்பத்திற்குட்படுத்தப்பட்ட மக்கள் மீதே குற்றத் தைச் சுமத்துகிறார்கள். ஆனால் ஐ.பி.கே.எவ் ஆனது தனது ஜவான்களை சாதாரண இராணுவ விதிகளுக்கு உட்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

5. சர்வதேசக் கண்ணோட்டத்தில் ஐ.பி.கே.எவ்வின் இருப்பு அமைதியை நிலைநாட்டும் படையாகச் செயற்படுவதும், அதனூடாக ஜனநாயகப் போக்கினை மீண்டும் நிலைநிறுத்துவதுமாகும். இவர்கள் தம்மைத் தமிழ் மக்களின் நண்பர்கள் என்றும் மேலும் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் கடந்த ஒன்றரை வருடங்களின் பின்பும் தமிழ் மக்களின் நிலைமையைப் புரிந்து கொள்வதற்கோ அல்லது அரசியல் ரீதியாக எழும் ஊர்வலங்கள் போன்ற மிகவும் உணர்ச்சிகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை மனிதாபிமான முறையில் கையாள்வதற்கோ என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? (இதற்கு அண்மையில் இடம்பெற்ற மாணவர் சாத்வீக எதிர்ப்புப் போராட்டம் ஓர் உதாரணமாகும்.)

6. சாதாரண சிவில் சட்டங்களைத் திரும்பவும் நடைமுறைப்படுத்த இவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் என்ன? முக்கியமாக ஐ.பி.கே.எவ்வும் அதனோடு தொடர்பு கொண்டவர்களும் அவற்றிற்கு கட்டுப்படுவதற்கான வழியில் தமது செயற்பாடுகளில் காட்டும் தன்மைகள்தான் என்ன?

மேற்கூறிய கேள்விகளுக்கான பதில்களைக் கொடுக்கின்றபோது ஐ.பி.கே.எவ் ஆனது தமிழ் மக்களின் நண்பர்களாகவா, அல்லது வேறு நலன்களின் அடிப்படையிலா இங்கு இருக்கிறார்கள் என்பது தெட்டத் தெளிவாகும். மேலும் இது அமைதிப்படை என்ற அடிப்படையில் இந்தியா இங்கு இருப்பதின் பின்னணிக்கான தெளிவான காரணத்தை முன் கொணரும்.

தமிழ் இனத்தின் தலைமையைப் பெறவிரும்பும் ஒவ்வொருவரிடமும் பின்வரும் கேள்விகளைக் கேட்கின்றோம்.

1. ஒரு சிலர் எங்களின் வாக்குகளைக் கேட்டு அழகான பத்திரிகை விளம்பரங்களுடன் எங்களிடம் வருகின்றீர்கள். உண்மையிலேயே எங்களின் உள்ளக்கிடக்கையையும், அபிலாசையினையும் கருத்திற்கொண்டு நம்மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க முடியாவிட்டால், உங்களால் எம்மை மேலும் அடிமை நிலைக்கே கொண்டு செல்ல முடியும்என நேர்மையாக மக்கள் முன் சொல்லுங்கள்.

2. எங்களுடைய பெயரால் எங்களில் சிலர் ஆயுதம் ஏந்தி தங்களின் நலனுக்காகச் செயற்படுவதாகக் கூறுகிறீர்கள். நாம் கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு தமது சமூகம் மேலும் மேலும் பலவீனப்பட்டு பல்வேறு மறைமுகமான பிடிகளுக்குள் சிக்கிக்கொண்டு செல்கின்றது என்பதை உங்களால் பார்க்க முடியவில்லையா? முன்பு எமது பிரதேசத்தை இழக்க இருந்தோம். இன்று எமது சுதந்திர உணர்வுகளையே இழந்துவரும் நம்பிக்கையிழந்துவரும் நிலையில் இருக்கிறோம். நாங்கள் உங்கள் தியாகச் செயல்களுக்கு மிகவும் மதிப்புக் கொடுக்கிறோம். அது வீணாகப் போவதையும் நாம் விரும்பவில்லை. உங்களின் விருப்புகளுக்கு மக்களை அடிபணியச் செய்ய பலாத்காரத்தினை உபயோகிக்காதீர். அது அந்நியரின் பலாத்காரத்தைக் காட்டிலும் கூடிய அளவில் எம்மைப் பலவீனப்படுத்தும். மக்களை அரசியல் நோக்கத்திற்காக பகடைக்காய்களாக உபயோகிக்க வேண்டாம். உங்கள் மீதான வரலாற்றுத் தீர்ப்பு உங்கள் வீரத்தைக் கொண்டு அல்ல, நீங்கள் இறுதியாராய்வில் சுதந்திரத்தை நோக்கியா அல்லது அடிமைத்தனத்தினை நோக்கியா மக்களை இட்டுச் சென்றீர்கள் என்பதிலிருந்தே வழங்கப்படும்.

மிகவும் சிக்கலான இக் காலகட்டத்தில் பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான செயற்பாடானது எமது மாணவர்களின் நலனில் மட்டுமல்ல, எமது சமுதாயத்தின் நலனுக்கே மிகவும் இன்றியமையாததாகும். இதுவே இன்று நாம் மக்கள் நலன் சார்பாக குரல் கொடுப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இந் நிலையில் இப்பல்கலைக்கழகத்தை குறுகிய அரசியற் காரணங்களுக்காகவோ, அல்லது வேறு காரணங்களுக்காகவோ உபயோகப்படுத்த முனைய வேண்டாம் என்று தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்ட சக்திகள் அனைத்தையும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்விரு மாணவர்களினதும் அநியாய இழப்பு பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தி புதிய தசாப்தத்திற்கு அத்திவாரமிடப் பண்ணுவதே நாம் அவர்களுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

04.02.89

— பல்கலைக்கழக விரிவுரையாளர், ஊழியர், நிர்வாக உத்தியோகத்தர், மாணவர் ஒருங்கிணைப்புக் குழு.

---


கவனிக்க →

தூண்டிலின் முகவரியில் மாற்றமேற்பட்டுள்ளது. இனி புதிய முகவரியுடனேயே தொடர்பு கொள்ளுங்கள்.

THOONDIL
SUDASIEN BURO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் கடிதங்கள்

தூண்டில் கலம் பதினொன்கின் அட்டைப்படத்தின் கீழுள்ள வாக்கியங்கள் எம்மவரின் அவல நிலையைத் தெளிவாக்குகிறது. 'மதம்' என்ற பாரதியின் கட்டுரை தேவையறிந்து எழுதப்பட்டுள்ளது. அம்பலவன் புவனேந்திரனின் 'எரி நட்சத்திரங்கள்' கவிதை எமது உண்மை நிலையைக் கூறுவதுடன் சாடவேண்டிய குறைபாடுகளை நன்றாகவே சாடியுள்ளது.

நோர்வே தி. தயாநிதி

'எது சுதந்திரம்?' தலையங்கம் இன்றைய யதார்த்தத்தை ஓரளவு சரியான அரசியல் வழியில் தொட்டிருக்கிறது.

இங்கிலாந்து ந. சபேசன்

தூண்டில் தரமானதாக, பயனுள்ளதாக அமைகிறது. தவறுகளைத் தட்டிக் கேளுங்கள். அநியாயத்திற்கெதிராகக் குரல் கொடுங்கள். உண்மை என்றோ ஒருநாள் உணரப்படும். அந்த வகையில் தூண்டிலின் பணி தொடர வாழ்த்துகள்.

நெதர்லாந்து கோவை நைதன்

'உலகச் செய்திகள்' என் போன்ற வாசகர்கட்கு பயனுள்ளது. 'அத்திவாரமில்லாத கட்டிடங்கள்' என்ற சிறுகதை நன்றாக உள்ளது.

வைகர் பா. வசந்தா

தூண்டில் வாசகர்களின் ஆணித்தரமான கேள்விகளுக்கு கவிஞர் சேரனின் பதில்கள் சிந்திக்கத் தூண்டியது மட்டுமன்றி சேரனை சமூகவியலாளனாகவும் காட்டியுள்ளது.

நூறன்பேர்க் ப. வி. சிறீரங்கன்

எதேச்சையாக சில பிரதிகள் பார்த்தேன். பார்த்திபனின் 'கனவை மிதித்தவன்' என்னைப் பாதித்தது. சமூகப் பிரதிபலிப்புள்ள எழுத்துகள். டானியலின் எழுத்துகளைப் புதிய கோணத்தில் பார்த்தேன்.

முன்சன்கிளாட்பாக் முரளி

ஆசிரியர் தலையங்கத்தில் நழுவல் பாங்கைக் கைவிட்டு, பெயர்களைக் குறிப்பிட்டு விமர்சித்திருப்பது வரவேற்கத்தக்கது. 'வியர்வையின் விருப்பம்' என்ற சிவத்தின் கவிதை மிகவும் தரமானது. ஒவ்வொரு வரியிலும் வியர்வை மணக்கிறது. உழைப்பாளியின் அவலத்தை மட்டும் தெரிவிக்காமல் போராட்டத்திற்கான அழைப்பையும் விடுத்திருப்பது பாராட்டுதற்குரியது. லெனின், மார்க்ஸ் என்று மொஸ்கோ வெளியீடுகளையெல்லாம் வரிவரியாக அப்படியே மனப்பாடம் செய்துவிட்டு, அவற்றை யதார்த்த நடைமுறைக்கேற்ப செயற்படுத்த முயற்சிக்காமல் மக்களிலிருந்து அந்நியப்பட்டு நிற்பவர்களை 'என்னடா எமதன்புக்குரிய...' என்று ஆரம்பிக்கும் வரிகள் அப்படியே படம் பிடித்துக் காட்டுவதுடன், இப்படியானவர்களைப் புறக்கணிக்காமல், இவர்கள் தமது 'கூட்டுக்குள்' இருக்கும் நிலையை மாற்றி மக்களுடன் இணைந்து தமது திறமைகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தையும் தெளிவாக்குகின்றன. துளசியின் சிறுகதையில் புதிய சந்ததியின் நிலை காட்டப்பட்டிருக்கிறதே தவிர வித்தியாசமாக எதுவும் சொல்லப்படவில்லை. 'அவர்கள்' கவிதையில் 'ஒரு கருப்பையில் கருவானவர்கள் நம் தேசக் கருக்களை கருக்கி மடிகிறார்கள்' என்ற வரிகள் உண்மையானவை. சேரன் தனது பதிலில் கூறியிருப்பது போல தமிழ், சிங்களப் பாட்டாளி வர்க்கம் இணைந்து போராடுவது யதார்த்தமான ஒன்றல்லத்தான். ஏனெனில் கடந்த காலச் சம்பவங்களினால் பெரிய இடைவெளியும், நம்பிக்கையீனமும் தோன்றிவிட்டன. ஆனால் இரு இனங்களிலும் பரஸ்பரம் முற்போக்குச் சக்திகளை இனம்கண்டு அவர்களுடன் தொடர்புகள் வைத்திருப்பது சாத்தியமானதே. 'நமது விமர்சனம்' அவசியமான பகுதியாகும்.

வூப்பெற்றால் த. வாசகர்


சேரன் எழுதும் கவிதைகள் நன்றாகவேயுள்ளன. இங்குள்ள நிலைமைகளை அனுபவித்து வந்தவரல்லவா? 'கனவை மிதித்தவன்' அத்தியாயம் 36இல் 'இந்திய இராணுவத்தால் தாக்கப்படுவதற்காகவோ அல்லது இனந்தெரியாதவர்களால் கொல்லப்படுவதற்கோ எல்லோரும் தயாராகிக் கொண்டிருந்தார்கள்' என்ற வரி உண்மையான தற்போதைய யாழ்ப்பாணத்தை காட்டி நிற்பவையே. இனந்தெரியாதவர்களின் கொலைகள் இப்போதும் தொடர்கின்றன. தெருவோரங்களில் மட்டுமல்ல, பாழடைந்த கிணறுகளிலும் உடல்கள் வீசப்படுகின்றன.

ஈழம் அருள்வாசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனவை மிதித்தவன்

— பார்த்திபன்

அப்படிக் கணேசன் கேட்டவுடன் பார்த்திபனுக்கு ஒரு மாதிரியாகத்தான் போய்விட்டது. புன்னகைக்க முயன்றான்.

"ஏன் அப்படிக் கேட்கிறீர்?"

"பின்ன என்ன? பாஸ்போட் மாத்திப் போறதைப் பற்றி எழுதுறீர். தேவையில்லாத குப்பையளையெல்லாம் கிளறுறீர். மற்றவை செய்யிறதைக் குத்திக் காட்டுறீர்?"

"அதுகளை எழுதிக் காட்டிக் குடுக்கிறதெண்டே கருத்து?"

"வேற என்ன?"

"ஒரு உதாரணம். உம்மட முகத்தில பரு இருக்குது. அதைக் காட்ட நான் கண்ணாடியைத் தூக்கிப் பிடிச்சா என்னாலதான் பரு வந்ததெண்டு சொல்லலாமே? பரு இருக்குதெண்டு உமக்குத் தெரிஞ்சாத்தானே நீர் சிகிச்சை செய்யப் பாப்பீர்"

"உந்த விசர்க் கதையள் எனக்கு வேண்டாம். உம்மைக் கண்ணாடியைப் படிச்சுக் கொண்டு நிக்கச் சொல்லி ஆர் விட்டது? உம்மட அலுவல்களை நீர் பாரும். எங்களைப் பாக்க எங்களுக்குத் தெரியும்" கணேசன் வெம்மை மாறாமல் சொன்னான்.

"ஆர் சொன்னது இல்லையெண்டு. உங்களை நீங்களே கவனிக்கிறது உங்கட சுதந்திரம். என்னால முடிஞ்சதைச் செய்யிறது என்ரை சுதந்திரம் மட்டுமில்லை, நோக்கமுந்தான்"

தொடர்கதை 40



"நீர் எழுதி மற்றவையைத் திருத்தப் போறீராக்கும். உதவி செய்யிறதுதான் உம்மட நோக்கமெண்டா நாட்டுக்குத் திரும்பிப் போய் அங்க ஏதாவது செய்யும். இஞ்ச வசதியா இருந்து கொண்டு மற்றவையை கவனிக்க வெளிக்கிடாதையுங்கோ"

கணேசனின் குரலிலிருந்த சூட்டை பார்த்திபன் அவதானித்தான். காரணம் அவனுக்குப் புரியவில்லை. ஆனால் அவன் செய்வது விமர்சனமல்ல என்பது மட்டும் தெரிந்தது.

"நீர் சொல்லுறதில நியாயம் இருக்குது. அங்க நிண்டு முயற்சி செய்யிறதுதான் முக்கியம். அதுக்காண்டி இப்ப இருக்கிற இடத்தில தண்ணியடிச்சுப் போட்டுப் படுக்கிறதாலயோ அல்லாட்டி சும்மா இருந்துகொண்டு மற்றவை செய்யிற முயற்சியளையும் தடுக்கிறதாலயோ ஆருக்கும் எந்த நன்மையுமில்லை. இருக்கிற இடத்தைவிட செய்யிற செயல்தான் முக்கியம்"

"உம்மோட கதைச்சுப் பிரயோசனமில்லை. உம்மட எல்லா நடவடிக்கையளையும் நாங்கள் கவனிச்சுக் கொண்டுதான் வாறம். கெதியில உமக்குப் பாடம் படிப்பிப்பம்" என்று சொல்லிவிட்டு கணேசன் போய்விட்டான்.

பார்த்திபன் மறுபடி மேசையிலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்து விரித்தான். படிப்பதற்கு முன் கேள்வியொன்று பிறந்தது. 'நாங்கள் கவனிக்கிறோமாம். அதார் நாங்கள்?'

"என்ன கணேசன் வந்திட்டு ஓடுறான்? என்னவாம்?" என்றபடி வந்த ஞானம் பியர் போத்தல் ஒன்றை எடுத்து கவர்ச்சிகரமாகத் திறந்தான். நுரை தள்ளப் பார்த்தது.

"சும்மா கதைச்சம். கதையளைப் பற்றிச் சொன்னான்"

"கணேசனோ? அவன் உந்தப் புத்தகங்கள் வாசிக்கிறதே இல்லை. என்னத்தைக் கதைச்சவன்"

முத்துவும் சமையலறையைவிட்டு வந்தான். மூவரும் பசிக்கும் வரை கதைத்தார்கள். காலம் தாழ்த்திச் சாப்பிட்டார்கள். சாப்பிட்டபின் மறுபடி கூடினார்கள்.

"என்ன மாதிரிப் போகுது? ஊரில ஆக்கள் சுகமா இருக்கினமே?" பார்த்திபன் விசாரித்தான்.

"கஷ்டமான நிலமைதான். அண்டைக்குச் சொன்னனான்தானே? தங்கச்சி மோசம் போட்டா. அம்மாவும் வயக்கெட்டுப் போனா. அக்காதான் இப்ப வேலைக்கும் போய் சீவியம் நடக்குது" ஞானம் சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது குரல் தளதளக்கப் பார்த்தது.

"எல்லாருக்கும் கஷ்டம்தான்"

"உழைச்சு அனுப்பலாமெண்டா வேல எடுக்கேலாம இருக்கு. ஆபைற்சம்காறன் சைன் பண்ணிறானில்ல. கள்ளமா வேல செய்யிறதும் முந்திையப்போல அவ்வளவு லேசில்லை. முந்தி எங்கட ஆக்கள் பதினைஞ்சு மாக் சம்பளத்தை எட்டாக்கி, பிறகு மூண்டு மாக் ஆக்கினதுமாதிரி இப்ப போலந்துக்காறங்கள் இன்னும் குறைச்சு வைச்சிருக்கிறாங்கள். இன்னும் கொஞ்சக் காலம் போனா தனியச் சாப்பாட்டோட வேல செய்ய வேண்டிவரும். நிலமையள் அவ்வளவு கவலைக்கிடம்" என்று முத்து நாட்டு நிலைமையை எடுத்துரைத்தான்.

"எல்லாம் என்ரை பிழையடாப்பா. வந்த புதிசில எல்லாத்தையும் மறந்து கும்மாளந்தானே அடிச்சது. முழுக் காசையும் ஸ்பீல் மெசினுக்க போட்டும், டிஸ்கோவுக்குப் போயும், தண்ணியடிச்சும் அழிச்சாச்சு. தங்கச்சி செத்தான் வீட்டு ஞாபகத்தை எனக்கு கொண்டு வந்திருக்கிறாள்" எனும்போது ஞானத்தின் குரல் நிச்சயமாக தளதளத்தது.

"சரி நடந்ததை விடு. இப்ப மனுசனுயிட்ட தானே? அவனவன்நடடழிஞ்சாலும் பறவாயில்லையெண்டு இன்னும் குதியன் குத்திக்கொண்டு நிக்கிறாங்கள். மற்றவங்களையும் ஒண்டும் செய்ய விடுறாங்களில்ல. இதைவிட நீ பறவாயில்ல" என்றான் பார்த்திபன்.

"அதெண்டா நியாயந்தான். என்ரை சிநேகிதன் ஒருதனுக்கு ஊரிலயிருந்து கடிதம் வந்திது. செல்லடியால வீடிடிஞ்சு போச்சு. இப்ப ஆற்றையோ வீட்டில இருக்கிறம். அவையும் மதிக்கினமில்ல. முடியுமெண்டா கொஞ்சக் காசனுப்பு எண்டு தகப்பன்காறன் வெற்றர் எழுதியிருந்தார். அவன் காசனுப்பாட்டிலும் பறவாயில்ல. என்ன செய்தவன் தெரியுமே? தான் கோட்சுக்கு குடுக்க வேணுமெண்டு உடைஞ்ச வீட்டைப் படமெடுத்து அனுப்பச் சொல்லிக் கடிதம் போட்டவன்." முத்து பாதி நகைச்சுவையாகவும், மீதி 'சீரியசாக'வும் சொல்லி முடித்தான்.

ஞானம் அதில் சிரத்தையெடுக்கவில்லை. அவன் தனது வீட்டுஞாபகமாகவே இருந்தான்.

"அக்காவும் பாவம். கலியாணம் செய்யிற வயசாச்சு. இந்தவயசிலயே எல்லாக் கஷ்டத்தையும் பட்டிட்டா. இவ்வளவு பிரச்சனையளுக்குள்ளயும் வேலைக்குப் போய் வாறா. அங்க அதுகள் கஷ்டப்பட இஞ்ச என்னால சந்தோசமா இருக்கேலாம இருக்குது. பேசாம நாட்டுக்குப் போவம் எண்டுயோசிச்சா இயக்கங்களை நினைக்க விசராயிருக்குது" ஞானம் கூறிவிட்டு



பியர் கொஞ்சம் குடிக்க, மற்றவர்கள் மௌனமாயிருந்தார்கள்.

அன்றும், அடுத்த நாளும் அவர்கள் நாட்டைப் பற்றியும் தங்களைப் பற்றியும் நிறையக் கதைத்தார்கள். எல்லாம் முற்றுப்புள்ளியாக இல்லாமல் கால்புள்ளியாகவே இருந்தன.

மறுநாள் மாலை ஞானம் பார்த்திபனை ரயிலேற்றச் சென்றான். விசில் ஊதுவதற்கு முப்பது விநாடிகள் இருக்கையில் "இனி எப்படாப்பா வருவாய்?" என்று கேட்டான்.

"இந்தமுறை மாதிரி ஒரு தேவை இருக்கேக்க இருந்தாப்போல வந்து நிப்பன்" என்று பார்த்திபன் பதில் சொல்லி முடித்த போது விசில் ஊதப்பட்டு, கதவுகள் தன்னிச்சையாக மூடிக் கொண்டன. புகையிரதம் நகர்ந்து மறைந்ததும் ஞானம் மறுபடி வெறுமையானான்.

'விசர் பிடிச்ச சீவியம். நாட்டு நிலமையள் ஒரளவுக்குச் சரி வந்த உடன திரும்பிப் போட வேணும். இந்த நரகத்துக்க இனியும் இருக்கேலாது'

பஸ் நிலையத்தில் அவனுக்கான பஸ் வரவில்லை. காலநிலை ஐச்சரியமானமுறையில் மாறியிருந்தது. தலைமுடியைக் கோணல்மாணலாக்கி, சாயங்கள் பூசியிருந்தவர்கள் கிழிந்த ரீசேட்டுடன் தரையில் உட்கார்ந்து வைன் குடித்தார்கள். நாய்கள் சாதாரணமாக வாலையாட்டின. பலர் வின்ரர்ஜக்கற்றைத் துறந்திருந்தார்கள் அல்லது திறந்திருந்தார்கள்.

ஞானம் பஸ்ஸுக்காகக் காத்திருந்தான். 'அவங்களுக்கென்ன? எல்லாத்துக்கும் சோசல் இருக்குது. படிச்சாலும் சரி, படிக்காட்டிலும் சரி, வேல செய்தா என்ன, செய்யாட்டி என்ன, வயித்துப்பாட்டைக் கவனிக்க அரசாங்கம் இருக்குது. எங்களுக்கு அப்பிடியே? சீவிக்கிறதெண்டா தொழில் தேட வேணும். தேடி உழைக்க வேணும். உழைக்கிறதைச் சேமிக்க வேணும். சேமிக்கிறதை அக்காவுக்குச் சீதனம், தங்கச்சிக்குச் சீதனம் எண்டு சும்மா வாற ஒருதனிட்ட பறிகொடுக்க வேணும். பிறகு கையேந்த வேணும்.'

'இந்த நிலமையில ஊருக்குத் திரும்பிப் போய் என்ன செய்யிறது? அங்க ஒரு வேலயும் கிடைக்காட்டி அக்காவின்ரை உழைப்பில பங்கு போடுறதா எல்லோ முடியும். சைச, யோச்சா மண்டை வெடிக்கும்போல இருக்கு'

ஞானம் தன்னுடைய அறைக்கு வந்தபோது அவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. கட்டிலில் போர்வைக்குள் யாரோ படுத்திருந்தார்கள். போர்வையை விலக்கிப் பார்த்தபோது முகம் முழுக்க தாடி, மீசையுடன் பாலகுமார் படுத்திருந்தான். (இன்னும் வரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் விமர்சனம்

'தவம் செய்யும் லயன்கள்' என்ற கவிதையில் '... ஊதியம் பாதியாய் உறிஞ்சப்பருவதுபோல' என்ற வரி இடம்பெற்றுள்ளது. மலையகத் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டால்தானே அது பாதியாய் உறிஞ்சப்படலாம்.

'பெண்ணடிமை' என்ற கட்டுரையில் '... சில இடங்களில் ஒருபடி முன்னேறி பியர் போத்தல்களுடனும், சிகரெட்டுகளுடனும் கூடக் கூடிக் குலாவுகின்றனர். இந்தளவிற்கு எமது பெண்கள் ஓரளவு உயர்ந்துவிட்டார்கள் என்று பெருமைப்பட்டாலும் (இதன் அர்த்தம் கலாச்சாரச் சீரழிவிற்கு முண்டு கொடுப்பதல்ல)...' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் இப்படி நிற்பது கலாச்சாரச் சீரழிவென்றால் ஆண்கள் இதேவிதமாக நின்றால் அது கலாச்சாரச் சீரழிவு ஆகாதா? இந்தவகையான செயற்பாடுகளால் கலாச்சாரச் சீரழிவென்றால், அதை இருபாலாரும் செய்தால் சீரழிவில் சம பங்குதான். பெண்களால்தான் கலாச்சாரச் சீரழிவென்றால் அது பெண்ணடிமைத்தனத்தையே குறித்து நிற்கிறது. பெண்டிமைத்தனத்தை தகர்க்க வேண்டும் என எழுதப்பட்ட கட்டுரையில் இந்த முரண்பாட்டைத் தவிர்த்திருக்கலாம்.

'இலக்கியச் சந்திப்பு' பற்றிய கட்டுரையில் ஒரு தொகுப்பையே கட்டுரையாளர் தந்திருக்கிறார். இந்தச் சந்திப்பில் பங்குபற்றியவர்கள் என்ற ரீதியில் சந்திப்பு பற்றிய நமது கருத்துகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறோம்.

சந்திப்பின் ஆரம்பத்தின்போது இலங்கையில் பலியானவர்களுக்காக ஒரு நிமிடத்தையேனும் மௌன அஞ்சலியாகச் செலுத்தாதது இலக்கியச் சந்திப்பில் பங்குபற்றியோர் இலங்கையிலிருந்து அந்நியப்பட்டிருக்கிறார்களோ என்ற ஐயத்தை எழுப்புகிறது. இதைப் பற்றி சந்திப்பில் ஒரு வாசகரும் குறிப்பிட்டிருந்தார். நிகழ்ச்சிகளின் ஆரம்பமான சுய அறிமுகத்தில் எல்லோரும் தம்மை அறிமுகப்படுத்தியபோது ஒருவர் மட்டும் தன்னைப் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. இதை எவரும் கவனத்தில் எடுக்கவில்லை.

வாசகர் கருத்தைப் பெண்களே ஆரம்பித்தார்கள். முதல் இரண்டு சந்திப்பிலும் பெண்விடுதலை பற்றி மேலெழுந்தவாரியாகப் பேசப்பட்டாலும் மூன்றாவது சந்திப்பிலேயே பல பெண்கள் தமது கருத்துகளைத் தெரிவித்தனர். அதுவும் 'சிந்தனை' ஆசிரியரின் கோரிக்கையின் பின்னே. இப்படிப் பெண்கள் சுயமாகக் கருத்துத் தெரிக்க முன்வந்தமை முன்னேற்றமானதும், வரவேற்கக்கூடியதுமாகும். பெண்கள் கதைக்க ஆரம்பித்ததும் ஆண்கள் வழக்கம் போல் தலையிட்டு அவர்களின் நேரத்தைச் சுவீகரித்துக் கொண்டார்கள்.

வாசகர் கருத்து நேரத்தில் பல வாசகர்கள் பெயர் குறிப்பிட்டு (நேர்மையாக) விமர்சனம் செய்யவில்லை. உதாரணமாக சிந்தனை ஆசிரியர்குழுவைச் சேர்ந்த குமாரசாமி தனது கருத்தில் "ஒரு சிலர் பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதற்காகவே தேர்தல் என்பதுபோல் சிலர் எழுதியிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார். தூண்டிலையே இவர் கருதினாலும் பெயர் குறிப்பிட்டு விமர்சிக்கவில்லை. இதே போல் திருமதி நாகலிங்கம் தனது கருத்தில் "சில சஞ்சிகைகள் உண்மைகளைத் திரித்து பச்சைப் பொய்களை எழுதுகிறார்கள்" என்று குறிப்பிட்டார். எந்தச் சஞ்சிகை அப்படி எழுதியது என்று பலர் கேட்டபின்பும் அந்தச் சஞ்சிகையின் பெயரைக் குறிப்பிட அவர் மறுத்துவிட்டார். அத்துடன்தான் விமர்சித்து முடிந்ததும் குமாரசாமி பேனாவைத் தூக்கி எறிந்தார். இதே போல் பாரதிதாசனும் கொப்பியை எறிந்தார். இப்படியான செய்கைகள் விமர்சனம் என்றால் என்ன என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதையே தெரிவிக்கிறது. இலக்கியத்தில் நேர்மை எவ்வளவு அவசியமோ விமர்சனத்திலும் அப்படியே. விமர்சனங்கள் தாக்குதல்களல்ல. தூய்மையாக விமர்சனம் செய்யத் தெரிவதுடன் ஆரோக்கியமாக முகம் கொடுக்கும் மனோபாவத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நிகழ்ச்சிகள் ஆரம்பமானதிலிருந்து அனைத்தையும் வீடியோவில் பதிவு செய்து கொண்டிருந்தார்கள். வீடியோவில் பதிவு செய்யும் ஆடம்பரம் வேண்டாம். இதில் எமக்கு ஒப்புதல் இல்லையென நாம் எதிர்ப்புத் தெரிவித்தோம். சந்திப்புக்கு வராதவர்களுக்காகவே பதிவு செய்யப்படுகிறது என்று அன்னராசாவால் பதிலளிக்கப்பட்டு தொடர்ந்து வீடியோவில் பதியப்பட்டது. தங்கள் பலவீனங்களை பலமாக்க முயற்சி செய்த சில இயக்கங்கள் வீடியோவில் தம்மை விளம்பரப்படுத்தி மக்களை ஏமாற்றியது போலவே இலக்கியச் சந்திப்பும் வீடியோ மூலம் மக்களை ஏமாற்றக் கூடாது என்பதே எமது கருத்தாகும். வீடியோ பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சாதனம் எனினும் வீடியோவில் பதிவு செய்யக் கூடியளவிற்கு இந்த இலக்கியச் சந்திப்புகள் இன்னும் காத்திரமானதாக அமையவில்லை. அத்துடன் இலக்கியச் சந்திப்புக் குழுவிடம் போதிய நிதி வசதிகள் இல்லாத நிலையில் (அப்படி இருந்தாலும்) வீடியோவுக்காகப் பணவிரயம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

இலக்கியச் சந்திப்புக்கென நிரந்தரக் குழுவும், பரிசளிப்புக் குழுவும் உருவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கப்பட வேண்டுமென சிலர் ஆலோசனை தெரிவித்தார்கள். மூன்றுவது சந்திப்பு நடந்தும் இலக்கியச் சந்திப்பு இன்னும் 'இலக்கியச் சந்திப்பாக' இருக்காத நிலையில் நிரந்தரக் குழு அநாவசியமானதே. அத்துடன் இது வரை நடந்த சந்திப்புகளில் கலந்துகொண்ட வாசகர்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிடலாம். இப்படியான நிலையில், சஞ்சிகைகளைப் பற்றி வாசகர்களின் முழுமையான கருத்துகளை அறிய முடியாத நிலையில் இலக்கியச் சந்திப்பு ஒரு விதத்தில் அர்த்தமற்றதாகவே இருக்கிறது. இப்படிக் குறிப்பிடுவதால் இலக்கியச் சந்திப்பைக் குழப்புவதோ, நிறுத்துவதோ எமது நோக்கமென்பதல்ல. மேற்கு நாடொன்றில் பலத்த சிரமங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இம் முயற்சி ஆரோக்கியமானதாகவும், பயனுள்ளதாகவும், சரியான பாதையில் செல்ல வேண்டுமென்பதுவுமே எமது விருப்பமாகும். இதற்காகவே கடந்த சந்திப்பில் நடந்த சில தவறுகளைச் சுட்டிக் காட்டியுள்ளோம். இவை இனிவரும் சந்திப்புகளில் நீக்கப்படுவதுடன் ஆர்வமுள்ள வாசகர்கள் அனைவரும் உற்சாகமுடன் சந்திப்புகளில் பங்குபற்ற வேண்டும். இலக்கியச் சந்திப்பு பற்றிய இந்த விமர்சனம் நமது சுயவிமர்சனமுமாகும்.

இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருப்பதையும், அதன் செயற்பாடுகளையும் நியாயப்படுத்திக் கொண்டிருப்பவர்கள் 'மாணவர்களின் மரணம்' கட்டுரையில் பல்கலைக்கழக மாணவர்கள் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளைப் பற்றி சிந்திக்க மறுத்தால் அது வேதனைக்குரியதே. இதன்பின்பும் இவர்கள் தமது நிலைப்பாட்டில் மாறவில்லையாயின் பல்கலைக்கழக மாணவர்களில் மட்டுமல்ல, ஒடுக்கப்பட்ட மக்களின் மீதே இப்படியானவர்களுக்கு அக்கறையில்லையென்றாகிவிடும்.

'பெண்ணடிமை' என்ற கட்டுரையில் சீரழிவு இலக்கியங்கள் என்று குறிப்பிடப்பட்டவற்றுள் தொல்காப்பியம் சேர்த்தியல்ல. அது ஒரு இலக்கணநூலாகும். மகாபாரதம், இராமாயணம், திருக்குறள் என்பவை அவை படைக்கப்பட்ட காலத்து சமூக அமைப்பின் நலன் கருதிப் படைக்கப்பட்டன. அவற்றில் உள்ள சில நல்ல கருத்துகளை மட்டும் எடுக்காமல் கண்மூடிக்கொண்டு அப்படியே பின்பற்றுவது சீரழிவுக்கே இட்டுச் செல்லும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ | ழை | ப் | பு | ■ |
| டை | ■ | ■ | நு | ம |
| மை | நி | ட | யு | ணி |
| ■ | ■ | ம | ம் | நி |
| வ | ர் | க் | க | ம் |

இ.கு. வைக்கலாமே.



# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.


ஏப்ரல் 1989 — இலம் : 16

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்

முகவரி ............ THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633


சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

6 மாதங்கள் – 20 டி.எம்.
1 வருடம் – 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கான சந்தா விபரம்

6 மாதங்கள் – 25 டி.எம்.
1 வருடம் – 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலுள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

உங்கள் சந்தாக்களை கீழுள்ள வங்கி விபரங்களின்படி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தை கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வங்கி கணக்கு இலக்கம் 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் இனமே

உன் உறங்கும் காலம்
முடிவுறும் வேளை

இதோ—
மிக அருகில்
'அடுக்களை அரசி'
'கற்புத்தெய்வம்'
மெல்லியலாள் etc etc.
எல்லாம் வெறும் கனவுப்
பொன் விலங்குகள்,
சுயநலக்காரர் உன்மேற் சூட்டிய
மாய முட்கிரீடங்கள்.

உன் பொறுப்பைத் தட்டிக்கழிக்க
'மெல்லியலாள்' என
உன்மேற் போர்த்தப்பட்ட
போர்வையைக் காட்டி
அதனுள் ஒளியாதே.

கனவுகள் வேஷங்களைக் கலைத்து
விரைவில் விழித்தெழு!
நிஜத்தை எதிர்கொள்!
நின் பங்களிப்பைச் செய்.
□
மைத்ரேயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org